Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 20 ஞாயிற்றுக்கிழமை (04.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 096

## தெற்காசிய கண்காணிப்பாளர்கள் நாடு முழுவதும் கடமையில்

### தேர்தல் ஆணையாளருடனும் சந்திப்பு

ஜனாதிபதித்தேர்தலை கண்காணிப்பதற்காக கொழும்பு வந்துள்ள தெற்காசியத்தேர்தல் அதிகாரிகள் ஒன்றியம் மற்றும் கண்காணிப்பு அமைப்பின் கண்காணிப்பாளர்கள் நேற்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவை சந்தித்துள்ளனர்.

இந்தச்சந்திப்பில் சுமார் 55 பேர் பங்கேற்றிருந்ததாக தெரிவிக கப்பட்டுள்ளது.

கடந்த ஏழாம் திகதி இலங்கை வந்த கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பர் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ.அமரதாச தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கண்காணிப்பாளர்கள் அனைவரும் சகல மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் 15 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. அனுராதபுரம், மாத்தறை மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களிலே இந்தச்

(19) ஆம் பக்கம் பார்க்க


## யதார்த்தமான அரசியல் நிலைப்பாடே மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டும்

### விவசாயிகள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்

யதார்த்தமான சரியானதொரு நிலைப்பாட்டை எடுப்பதன் ஊடாகவே மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியுமென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு அண்மையாகவுள்ள மண்டபத்தில் அப்பகுதி விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சிப் பகுதியில் 438 நெற்செய்கையாளர்களுக்கு விதை நெல்லுக்கான உதவிகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பெற்றுக் கொள்ள முடியும்.

குடாநாட்டில் 2,000 வெங்காயச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 5,000 ரூபா வீதமும் வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.




அதுமட்டுமன்றி விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# பொது எதிரணியுடன் கூட்டமைப்பு மந்திராலோசனை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் மைத்திரிபால சிறிசேனவின் குழுவினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் எதிர்வரும 8 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப் படவுள்ள பிரசார நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

மைத்திரி குழுவினருடனான இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட் ஆகியோர் பங்கேற்றனர்.



## கூட்டமைப்பின் முடிவுக்காக நான் வெட்கப்படுகிறேன்

### அனந்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு வாக்குப்போடும்படி கூட்டமைப்பு கேட்பதற்காக நான் வெட்கப்படுகிறேன் என்றும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மைத்திரிபாலவிற்கு ஆதரவு வழங்குகின்றதாக தெரிவித்தமைக்காக தான் இந்த தேர்தலை புறக்கணித்துக் கொள்வதாக வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிகரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இறுதி யுத்தத்தின் போது, பாதுகாப்பு அமைச்சின் பிரதி அமைச்சராக மைத்திரி இருந்துள்ளார். அப்போது, முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் தமிழ் மக்களை கொல

(19) ஆம் பக்கம் பார்க்க

## சமுர்த்தி வங்கி மீது தாக்குதல்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கியின் பெயர்ப் பலகை காடையர்களால் உடைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அக்கராயன் பிரதேச சமுர்த்தி வங்கிச் செயலகம் அந்த பிரதேசத்தில் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வரும் ஒரு சில காடையர் குழுவினால்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சுப்பதவிக்காக மைத்திரிக்கு ஆதரவளிப்பதா?

### உள்ளிருந்து கிளம்புகிறது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மைத்திரி ஜனாதிபதியாக தெரிவாகினால் அவர் அமைக்கவிருக்கும் தேசிய அரசில் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொண்டு அவரது அரசில் பங்காளிகளாக மாறும் எண்ணத்தை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கைவிடவேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

(19) ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் முடிவை எதிர்ப்பவர்கள் மீது நடவடிக்கை

### சம்பந்தன் அறிவிப்பு

மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க எடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பகிரங்கமாக கருத்து வெளியிடும் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாம் உத்தரவிட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவுக்கு, மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கமும், தாமும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்றிடம் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.அதேவேளை, மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தாம் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாகப் பரப்புரை செய்யப் போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

இதற்கிடையே, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

செய்தி :- மாலை ஏசியதால்
மயங்கி விழுந்தார் அனந்தி



# 43 ஆவது அகவையில் கால்பதிக்கும் தோழர் ரஜனி

மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித் திருக்கும் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் காரைநகர் பிரதேச E.P.D.P பொறுப்பா ளருமாகிய திரு. வீரமுத்து கண்ணன் (தோழர் ரஜனி) அவர்கள் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார் அவரை பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என மனமார வாழ்த்துகிறோம்.

நெய்தல் கிராம மக்கள்
மு.திருநாவுக்கரசு (தலைவர்)
காரைநகர்.

வீரமுத்து கண்ணன் (ரஜனி தோழர்) அவர்களின் 43 ஆவது அகவையில் தற்துணிவாய் கொள்கை மாறாது காரை மக்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் நோக்கில் உழைக்கும் கரம் கொண்ட கள்ளம் கபடமற்ற காரைக் கண்ணன், மருதபுர மக்களின் தேவைகள், அபிவிருத்திக்கும் முழுமூச்சாக பாடுபட்ட மருதபுரம் மக்களின் மங்கள புகழ் பூத்த புன்னகை வேந்தனின் சேவையை பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்கு எமது மக்களின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துக்கள் உரித்தா கட்டும்.

மருதபுரம் வாழ் மக்கள்
கடற்றொழிலாளர் கூ.சங்கம்

காரைநகர் மக்களின் விடிவெள்ளியாக மக்களின் நலனில் அக்கறை உள்ளவராக தோளோடு தோள் நின்று தன்நலன் கருதாது பொதுநலம்கொண்டு அயராது பாடுபட்டு எம் கிராமத்தை முன்னேற்றம் காணச் செய்த தோழர் வி.கண்ணன் அவர்கள் 43 ஆவது அக வையில் தடம் பதிப்பதினை மனதாரப் பாராட்டு கின்றோம். பல நூற்றாண்டுகள் வாழ்ந்து மக்கள் சேவையினை செய்து வர வாழ்த்துகின்றோம்.

மருதமலை முருகன் சனசமூக நிலையம்
மருதமலை கடற்றொழிலாளர் கூ.சங்கம்
மருதபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்
மருதபுரம் விளையாட்டுக் கழகம்

43 ஆவது அகவையில் கால்பதிக்கும் வீரமுத்து கண்ணன் எத்துயரும் நெருங்காது மக்களுக்கு சேவைபுரிந்து சந்தோச மாகவும் அன்பாகவும் வாழ எல்லாம் வல்ல மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் துணை புரிய வேண்டி வாழ்த்துகின்றோம்.


உதய குமார்-
(பிரான்ஸ்)
மனைவி கண்ணன் புஸ்பகுமாரி-ஆலடிகாரைநகர்
மைத்துனி ரஞ்சிதகுமாரி
பெறாமகள்மார் கம்சா, சிந்துஜா
மருமகன் சஞ்சீவன்
மைத்துனன், சிறிதரன், லிங்கேஸ்வரன்
செல்வம், சன்ஜய்
இளஞ்சோலை விளையாட்டுக்கழகம்
தியாகி சோபா அறிவாலயம்
முதியோர் பகல் பராமரிப்பு நிலையம்-சிவகாமி
அம்மன் கோவிலடி
சிதம்பரேஸ்வரா சனசமூக நிலையம்
வேதரடைப்பு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்
நியூலக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

காரை மக்களின் தேவைகளை கட்டிக்காத்த காரை கண்ணா அகவை 43 லும் தளராது தலைகுனியாது நிலைகுலைந்து சொத்து இழந்து சுகமிழந்து நின்ற எம்மை அரவணைத்து அடிப்படை வசதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்த அன்புள்ளம் கொண்ட தோழர் ரஜனி அவர்களை பல்லாண்டு காலம் நீடூழ்கி வாழ்க வென வாத்துகின்றோம்

தோப்புக்காடு கிராமஅபிவிருத்திச் சங்கம்
ஸ்ரீசுப்பிரமணிய ஆலய சேவகர் சங்கம்
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக்கழகம்

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் காரை நகர் பிரதேச பொறுப்பாளரும் காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவரும் மக்களுடன் நின்று மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் தோழனுமாகிய ஏ.கண் ணன் நாற்பத்தி மூன் றாவது அகவையில் கால் பதிப்பதையிட்டு நாம் பாராட்டுகிறோம் அவரது சேவைமென் மேலும் தொடரவேண்டும் என்று எல்லாம் வல்ல சிறிமுருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஸ்ரீ முருகன் கிராம
அபிவிருத்திச்சங்கம், கடற்றொழில் சங்கம்,
ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்,
ஸ்ரீமுருகன் முன்பள்ளி.



அன்பிற்கு உறைவிடமாய்
அண்டி வருவோர்க்கு ஆதரவளிக்கும்
அகவை 43 காணும் ஆருயிர் நண்பா!
நீ பல்லாண்டு காலம் வாழ்க.

இருளில் வாழ்வோர்க்கு இலவச மின்சாரம்
ஏழை மக்களுக்கு உடனடி வாழ்வாதாரம்
விதவைப் பெண்களின் விழி நீர் துடைக்க
விறுவிறுப்புடன் உம் பணி தொடர்ந்திடுவாய்
ஏழை மக்களுக்காய் எண்ணற்ற சேவை புரியும்
ஏழைகளின் நண்பன், காரை மண்ணின் மைந்தன்
மக்களின் தேவையறிந்து மனமுவந்து உதவி செய்யும்
மாமன்னா! என்னும் உம்பணி தொடர்ந்திடவே

உமது அன்பிற்கினிய காரைநகரின்
கல்வந்தாழ்வு வேரப்பிட்டி
மக்களாகிய நாம் நீர் நீடூழி காலம் வாழவேண்டும் என
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்க தோழா
வளர்க உம்பணி

வாழ்த்துவோர்
கல்வந்தாழ்வு
வேரப்பிட்டி
வாரிவளவு வாழ்மக்கள்

காரை மண் தத்தெடுத் தவப் புதல்வனாய் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகம் அவர்கள் எமக்குத் தந்த முத்தான வீரமுத்து கண்ணன் அவர்களின் 43 ஆவது அகவையில் தடம் பதித்து வரலாற்றுப் புகழ்பெற பல்லாண்டு காலம் பணிகள் பல புரிந்து அன்புகொண்ட உள்ளங்களில் வாழ வாழ்த்துவதோடு அவர் சேவை மேன்மேலும் வளர இன்று தேர்த்திருவிழாக்காணும் எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரேஸ்வர சௌந்தராம்பிகையினை வேண்டி நிற்கின்றோம். மகிழ்வான தருணங்கள் மலரட்டும்-தோழா

உன்பிறந்த நாளில்
பூக்கள் பூக்கும் காலமிது புன்னகை-மன்னா
நீ பூவாய் புவியினில் பூத்த காலமிது

இருளில் இருந்த எம்மை இடர்களைய
இப்பாரினிலே வந்துதித்தாய்
இன்று தோழா உனக்கு பிறந்த நாள்
காரை மக்களின் விடிவெள்ளி உதித்தநாள்
நெருங்கிய நெகிழ்வான தேசங்கள் உன்னை
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றோம் தோழா

வாழ்த்துபவர்கள்
ஜெயா, மயூரி
நிஷாகரன், பவிந்தன்
யதுசன், ரவி

இன்னல்கள், துன்பங்கள் ,துயரங்கள் அத்தனையும் சந்தித்து
இப்புவியில் அகவை காணும் மதிப்புக்குரிய
பிரதம காரை அமைப்பாளர் எதிர்கட்சி தலைவர்
திரு வீரமுத்து கண்ணன் (ரஜனி) அவர்களே

பட்டது போதும் பாரினிலே என்று-உன்
ஆன்மீகத்திலும் அறிவியியலும் சரிநேர்மை தவறா
சேவை தர்மம் சிவதர்மமாகலாம் என்று
எம்பணி செய்து கிடப்பதே-ஈழத்தில்
இடம்பெயர் உறவுகளுக்காக குரல் கொடுக்கும் உத்தமனே
வீறுகொண்டு நடைபோட்டிடவே நீறுகொண்டு ஐயன் துணை வேண்டி
வாழ்த்துகிறோம் வாயார

இப்படிக்கு
காரை வியாவில்
மு.சத்தியவான் குடும்பத்தினர்

அகவை 43 இல் அடியெடுத்து வைக்கும் அன்புத் தோழர் வி.கண்ணன் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம் அவர் தம் வாழ்நாளில் எமது கிராம வளர்ச்சிக்கும் மக்கள் நலப் பணி செய்து வீதி மின்சாரம், குடிநீர் என்பன கிடைப்பதற்கு அளப்பரிய சேவையாற்றிய அன்புத்தோழர் அவர் தம் குடும்பத்தோடு பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென எல்லாம் வல்ல அன்னைமார் பெருமானையும் ஸ்ரீ பழனிவேல் முருகப் பெருமானின் அருள் கடாட்சம் கிடைக்கவேண்டுமென்று வேண்டி வாழ்த்துகின்றோம்.

நன்றி

இப்படிக்கு
நிர்வாகம்

வாழ்த்துவோர்
01. ஊரியம்பதி கிராம அபிவிருத்திச் சங்கம்
02. ஊரியம்பதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
03. ஊரியம்பதி க.தொ.கூ.சங்கம்
04 அண்ணமார் ஆலய பரிபாலன சபை
05 ஸ்ரீ பழனிவேல் முருகப் பெருமான் பரிபாலன சபை
06 இளந்தென்றல் வீளையாட்டுக் கழகம்

# பல்வேறு விலைகளில் மருந்துகள் பாவனையாளர்கள் அசௌகரியம்

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பார்மஸிகளில் வெவ்வேறு விலைகளில் மருந்து வகைகள் விற்பனை செய்யப்படுவதினால் பாவனையாளர்கள் பலர் பெரும் இன்னல்களுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே வகையான பல மருந்துகள் வேறுவேறு இடங்களில் உள்ள பார்மஸிகளில் மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. தமக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான நோய்களுக்காக வைத்தியர்களினால் எழுதிக் கொடுக்கப்படும் மருந்துச் சிட்டைகளைக் கொண்டு பார்மஸிகளுக்கு செல்லும் இந் நோயாளிகள் பார்மஸிக்காரர்கள் சொல்லும் விலைக்கே அவற்றைப் பெற்றுக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளாகின்றனர்.

சில பார்மஸிகளில் மருந்துகள் விற்பனை செய்யப்படும் விலைகளை விட வேறு பார்மஸிகளில் அதே மருந்து விலை பத்து ரூபா, இருபது ரூபா என அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது. பல பார்மஸிகளில் ஒரே விலையில் மருந்துகள் கிடைப்பதில்லை.

நாட்டில் தற்போது வயது வந்தவர்களோடு, இளவயதுள்ளவர்களும் பலர் நோயாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இதனால் பார்மஸிகளும் மருந்து வாங்குபவர்களினால் நிறைந்து வழிகிறது. பல பார்மஸிகளில் விலைப்பட்டியல் இல்லை. முக்கியமான மருந்துகளின் விலைகள் கூடப் பூவனையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதில்லை. ஆங்கில மருந்துகள் விற்பனை செய்யும் அனைத்துப் பார்மஸிகளும் குளிரூட்டப்பட்டவையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும் பல பார்மஸிகள் இதனை செவிமடுக்கவில்லை.

ஆங்கில மருந்து வகைகளுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். பாவனையாளர் அதிகார சபை இதனைக் கண்காணிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியம் எனப் பாவனையாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆங்கில மருந்துகளைப் பாவிக்கும் தேவை அதிகரித்துக் காணப்படுவதினால் பார்மஸிகளில் அவற்றின் விலை கட்டுப்படுத்தப்பட வேண்டும், நோயாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (137)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினதும் வடக்கின் வசந்த விசேட நிதியிலிருந்து ஜே/116, ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120, ஜே/121, ஜே/122 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை கால்நடைகள் வழங்கி வைக்கப்பட்ட போது...

# குறுக்கே பாய்ந்தது நாய்; இருவர் படுகாயம்


(யாழ்ப்பாணம்)

அண்மையில் வீதியின் குறுக்கே நாய் பாய்ந்ததில் இடம் பெற்ற விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சேரி நல்லூர் வீதியில் மோட்டார்சைக்கிளில் பயணம் செய்தவர் ஒருவர் வீதிக்கு குறுக்காக நாய் பாய்ந்ததில் காயமடைந்தார். நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி மனோகரன் (வயது-37) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை சுன்னாகத்தில் மோட்டார் சைக்கிளுக்கு குறுக்காக நாய் பாய்ந்ததில் விபத்துக்குள்ளான மல்லாகம் வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நிர்மலன் (வயது -34) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ,25)

# "வட்டிக்காரன்" குறும்படம் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

நெடியகாடு இளைஞர் கலாமன்றத்தின் 19 ஆவது தயாரிப்பான "வட்டிக்காரன்" குறும்பட வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெடிய காடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலின் வன்னி மரப்பிள்ளையார் பூஜையை தொடர்ந்து நடைபெற்றது.

படத்தின் இறுவட்டினை ஆலய பிரதம குரு வெளியிட, நெடியகாட்டின் மூத்த உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர்.

# அப்படியென்றால்...



## சந்திரிகா குமாரதுங்க சொல்கிறார்

'மிஸ்ரர் பிரபாகரன்' என ஏளனத்துக்காகவே நான் கூறினேன். பிரபாகரன் இந்த நாட்டிற்கு எவ்வளவு பெரிய ஆபத்துகளை விளைவித்தார் என்பதை நாம் மறக்க முடியாது. அவரால் நான் உட்பட நாட்டிலுள்ள அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவரால் நாடு பெரிய அச்சுறுத்தலுக்குள் சிக்குண்டிருந்தது.

## அப்படியென்றால்

சந்திரிகா யாழ்ப்பாணத்தில் இந்த உண்மைகளைச் சொல்லியிருக்கலாமே. யாழ்ப்பாணத்தில் பிரபாகரனை மதிக்கும் தோரணையில் (தந்திரோபாயமாகப்) பேசிவிட்டு, அந்தப் பேச்சு தென்னிலங்கையில் சர்ச்சையைக் கிளப்பியவுடன் இப்படிக் குத்துக் கரணம் அடிக்கிறார்.

இந்த மாதிரியான குத்துக்கரணத்தை அவர் பதவிக்காலத்தில் அடித்தது ஒன்றும் புதியதல்ல.

இப்பொழுதும் அவர் குத்துக்கரணங்கள் அடிப்பது எதற்காக?

அதுவும் தேர்தல் பரப்புரைகள் நடக்கிற போதே அங்கொன்றும் இங்கொன்றுமாக கதைப்பது எந்த வகையில் நியாயமானது?

இனியும் இந்த மாதிரிக் குத்துக்கரணங்கள் அடிக்கத்தான் போகிறரா?

அப்படியென்றால், தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் சந்திரிகா தரப்பினால் தொடர்ந்தும் ஏமாற்றப்படப் போகிறார்களா?

இதைத் தடுத்து நிறுத்தி மக்களைக் காப்பாற்றுவது யார்?

## குறிப்பு

1. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன் என்று சொல்லிக்கொண்டே இரண்டு தடவை ஆட்சியிலிருந்த சந்திரிகா குமாரதுங்க, மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக இருக்கக் கூடிய ஒருவரை ஆட்சிக்கதிரையில் இருத்தி விட்டே இறங்கியவர்.
2. தன்னுடைய பரம எதிரியாக கருதிய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை தனக்கிருந்த நிறைவேற்று அதிகாரத்தை வைத்தே செயலிழக்கச் செய்தவர்.
3. தன்னுடைய ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் மீதான பெரும் படையெடுப்பைச் செய்தவர். அப்படியே வன்னியின் மீதும் பெரும் படைநடவடிக்கைகளைச் செய்தவர். படையினர் கைப்பற்றிய இடங்களில் எல்லாம் தன்னுடைய வெற்றிக்கொடியை நாட்டியவர். அந்த வகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்னோடியாக இருந்தவர்.

## அபிப்பிராயம்

யாழ்ப்பாணத்துக்கு வந்த சந்திரிகாவோ ரணிலோ யாழ்ப்பாண மக்களிடம் எந்த ஒரு சிறிய விடயத்துக்காகவும் மன்னிப்பைக் கேட்கவும் இல்லை. வருத்தம் தெரிவிக்கவும் இல்லை.

செம்மணியைக் கடக்கும்போது சந்திரிகா கிரிஷாந்தியை நினைத்திருப்பாரா? அல்லது மைத்திரியை யாழ்ப்பாண மக்கள் வெல்ல வைப்பார்கள் என்று நினைத்திருப்பாரா?

- ம.அய்யம்பிள்ளை -

உன் நல்ல செயல்களின் மூலம் பிறருக்கு வழி காட்டியாக இரு.
- இங்கர்சால்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யார் வெட்கப்பட வேண்டும்?

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் வெள்ளம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பலரையும் உலுக்கியெடுத்திருப்பதை ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் பார்க்க முடிகிறது.

மக்கள் தெற்கிலிருந்து பஸ்களில் அழைத்துவரப்பட்டார்கள் என்றும், காசு கொடுத்துக் கூட்டிவரப்பட்டார்கள் என்றும் பொச்சரிப்புகளை எழுதுகிற போதே.... அவர்கள் எதிர்பாராத அளவில் பெருந்திரளாக மக்கள் அங்கே குவிந்திருந்ததை ஒப்புக்கொண்டு விடுவதாக அல்லவா அமைகிறது?

மக்கள் நெரிசலுக்குள் சிக்கித் திணறினார்கள், வெயிலில் நின்று வாடினார்கள் என்றெல்லாம் கூட வெப்பியாரத்தில் வந்து விழுகின்றன குற்றச்சாட்டுகள். ஒருவேளை தேர்தல் பொதுக்கூடங்கள் அனைத்தும் குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் நடத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்களோ என்னவோ!

அது ஒருபுறமிருக்கட்டும். இலங்கையில் ஆட்சிக்கு வருகிற அரசாங்கங்களை ஆதரிப்பது, அவர்களிடம் பேசி, நடந்துமுடிந்த போரால் நொந்துகிடக்கும் எமது மக்களின் வாழ்க்கையை மீள மலர்விப்பது என்பதையெல்லாம் கொச்சையான விஷயங்களாகப் பலரும் பார்க்கிறார்கள்.

அவர்கள் நிச்சயம் இந்தக் குரூரப் போரால் எந்த நோவும் படாமல் தங்களைத் தப்பவைத்துக் கொண்டவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்கு, வருகிற அரசாங்கங்களை எல்லாம் எதிர்த்துக் கொண்டிருக்கும் திருப்தியே போதுமானதாக இருக்கிறது.

சந்திரிகா அரசாங்கத்திலும் இணைந்து மக்களுக்கு உதவுகிறார்கள், மகிந்த அரசாங்கத்திலும் இணைந்திருந்து மக்களுக்கு எதையோ செய்கிறார்கள், அடுத்து மைத்திரி அரசாங்கம் வந்தாலும் இப்படியே செய்வார்களா? என்று கேட்டு கேலி பேசுகிறவர்களுக்கு ஒரு விஷயம் புரியவில்லை.

சந்திரிகா பதவியிலிருந்த காலத்தில் ஏறக்குறைய சமஷ்டி மாதிரியிலான தீர்வுப்பொதியை அவர் வைத்தபோது, அதை எரித்துக் குழப்புவதற்கு உடந்தையாக இருந்துவிட்டு, ராட்சசியாக வர்ணித்துவிட்டு, இப்போது தமிழர்களுக்குத் தருவதாகச் சொல்ல எதுவும் இல்லை என்று அவர் வந்துநிற்கும்போது அவரை ஜனநாயக தேவதையாக தமிழ்மக்களுக்குச் சொல்வதற்கல்லவா வெட்கப்பட வேண்டும்!

பதவியில் இருந்தபோது சமாதான உடன்படிக்கையொன்றைக் கையெழுத்திட்ட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்படுவதற்கே மறைமுகமாக வேலை செய்துவிட்டு, இப்போது தமிழர்களுக்குத் தீர்வெதையும் சொல்லாமல் வருபவரை தமிழர்களிடம் சிபார்சு செய்பவர்களல்லவா வெட்கப்பட வேண்டும்!

சரத் பொன்சேகாவும், சம்பிக்க ரணவக்கவும், சஜித் பிரேமதாசாவும் அரசாங்கத்திற்கு வந்துவிட்டால், தமிழர்களுக்குத் தீர்வை வைப்பதற்கு ஒத்துழைத்து உதவுவார்கள் என்று தமிழ்மக்களின் காதில் இப்போது பெரிய பூப்பந்தைச் சுற்றுபவர்களல்லவா தங்கள் துரோகத்தனத்திற்கு வெட்கப்பட வேண்டும்!

ஆட்சியில் இருக்கும்போது எதிர்ப்பதும் பிறகு ஆட்சியிலிருந்து இறங்கியவுடன் அவர்களோடு கரம்கோர்த்துக் கொண்டாடுவதும், மீண்டும் அவர்களே ஆட்சிக்கு வந்துவிட்டால் எதிர்ப்பதும், பின்னர் அந்த ஆட்சியும் முடிந்தவுடன் அதே நபர்களைப் போற்றுவதுமாக நமது மக்களை எப்போதும் அவலங்களில் வைத்திருக்கவே தொடர்ந்து கூட்டுச் சேர்ந்து கொண்டிருப்பதில் கொச்சையில்லையா?

ரணிலுடனும், சந்திரிகாவுடனும், மைத்திரியுடனும், பொன்சேகாவுடனும், சஜித்துடனும், சம்பிக்கவுடனும், அத்துரலிய பிக்குவுடனும் போய் பணத்தை வாங்கிக்கொண்டு தாங்கள் மட்டும் குலாவுவதை விட, மகிந்த ராஜபக்ஷ மூலம் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கச் செய்வதில் என்ன இழிவைக் காண்கிறது இந்தத் தமிழினம்?

- ஆசிரியர்

# ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றது

## கோத்தாபய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக முன்வைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் உட்பட அனைத்துக் குற்றச்சாட்டுகளும் ஆதாரமற்றவை என பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கல்கமுவவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனை அவர் தெரிவித்துள்ளார். ஊழல்கள் மூலம் ஜனாதிபதி எதனையாவது பெற விரும்பியிருந்தால் அவர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் தொடர்ந்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் நடைபெற்ற காலமே ஊழலுக்கான சிறந்த காலமாக காணப்பட்டது.

ஆயுத கொள்வனவுகளில் ஊழல் காணப்பட்டது. எனினும் ஜனாதிபதி விடுதலைப் புலிகளை தோற்கடித்து, நாட்டை அபிவிருத்தி செய்தார். மக்கள் தற்போது அபிவிருத்தியின் பலாபலன்களை அனுபவிக்கின்றனர். ஜனாதிபதி ஊழல்களில் ஈடுபட்டிருந்தால் அந்த பலாபலன்கள் மக்களைச் சென்றடைந்திராது. அவர்கள், வீதிகள் பெருந்தெருக்கள் குறித்து குறிபிடுகின்றனர். கட்டுநாயக்கா நெடுஞ்சாலைகள் திட்டம் பல வருடங்களாக முன்னெடுக்கப்படாமலிருந்தது. ஆனால் நாங்களே ஒப்பந்தக்காரர்களுக்கு பணத்தை வழங்கி அந்தத் திட்டத்தை முன்னெடுத்தோம். இந்தத் திட்டங்களில் ஊழல் இருந்திருந்தால் அவை நிறைவேறியிராது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தின் போதும், அதற்கு முன்னைய அரசாங்கங்களின் கீழும் விடுதலைப் புலிகள் பலமடைந்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மது அருந்தியவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வெல்லவாய - அலுகல்லே வாவியில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வெல்லவாய பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த 31 ஆம் திகதி குறித்த நபர் மற்றொரு நபருடன் அலுகல்லே வாவிக்கு அருகில் இருந்து மதுபானம் அருந்தியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இதன்படி உயிரிழந்தவருடன் மதுபானம் அருந்தியவர் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 130 வாக்களிப்பு நிலையங்க்ள்

## அரச அதிபர் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 130 வாக்களிப்பு நிலையங்கள் ஊடாக மக்கள் வாக்களிக்கவுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தேர்தலில் பணியாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக்கலந்துரையாடல் தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 130 வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 06 பிரதேச செயலர் பிரிவிலும் இவ்வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது 50 வாக்களிப்பு நிலையங்கள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன.

மாகாண சபைத் தேர்தலின்போது நீண்ட தூரங்களுக்கு சென்று மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வாக்களிக்கவேண்டியிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதித் தேர்தலுக்காக 130 வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான கூட்டமொன்று நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகள் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடாத்தப்படவேண்டும் என்றும் தேர்தலுக்கான ஒழுங்குகள் போன்ற பலவிடயங்கள் ஆராயப்பட்டன.

அமைக்கப்பட்டுள்ள 130 வாக்களிப்பு நிலையங்களும் மழை வெள்ளப்பாதிப்புகளை எதிர்கொள்ளாமல் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது வெளிமாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பணிக்கு வந்திருந்தார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் நாடளாவிய ரீதியில் நடைபெறுவதன் காரணமாக மாவட்டத்தின் உத்தியோத்தர்களே கூடுதலாக பணியாற்றவுள்ளார்கள். அதற்கான பயிற்சிகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன என தெரிவித்தார்.

## சிறிகொத்தாவை சுற்றிவளைத்து பொலிஸார் தேடுதல் வேட்டை

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை சுற்றிவளைத்து பொலிஸார் திடீர் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கங்கொடவில நீதிமன்ற நீதவான் நுவான் மெப் பண்டாரவினால் விடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல் அனுமதியுடனேயே இந்த தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

"குடும்பக் காட்டு" எனும் தலைப்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சேறுபூசும் வகையில் அச்சிடப்பட்டதாக கூறப்படும் புத்தகங்கள் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை அடுத்தே சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அனைத்து அரச பாடசாலைகளும் முதலாம் தவணைக்காக நாளை ஆரம்பம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் வினாத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறும் பாடசாலைகள், ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்கு எண்ணும் நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகள் தவிரவுள்ள ஏனைய சகல அரச பாடசாலைகளும் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பின்னர், எதிர்வரும் 7 , 8 , 9 ஆம் திகதிகளில் மீண்டும் தேர்தலுக்காக பாடசாலை மூடப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வினாத்தாள் திருத்தும் பணிக்காகவும், தேர்தல் பணிக்காகவும் பயன்படுத்தப்படும் அரச பாடசாலைகள் ஜனவரி 12 ஆம் திகதி முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளது.

பரிசுத்தப் பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள 48 பாடசாலைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையில் மூடப்படும் எனவும் இந்தப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

**மைத்திரிபாலவின் நிர்வாகத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை என்பது கூட்டமைப்புக்கு உடன்பாடான விடயம். அதற்காகவே இவர்கள் மைத்திரி பாலவை ஆதரிக்கின்றார்கள் என்றும் கூறலாம்.**

# மகிந்தவின் அரசாங்கத்திலேயே பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்

**சங்கர சிவன்**

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருக்கின்றது. கூட்டமைப்பின் இந்த முடிவு தலைவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றதேயொழிய தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்தவில்லை. இது பற்றி விரிவாகக் கூறுவதற்கு முன் சம்பந்தன் தெரிவித்த இரண்டு கருத்துகளைப் பார்ப்போம்.

மைத்திரிபாலவுக்கு ஆதரவளிப்பதை நியாயப்படுத்துவதற்காகச் சம்பந்தன் கூறிய விடயங்களில் சர்வாதிகாரத்தை எதிர்க்க வேண்டும் என்பதும் 2015இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு நிச்சயம் என்பதும் முக்கியமானவை. புலிகளின் சர்வாதிகாரத்தை எந்தவிதமான மனச்சங்கடமும் இல்லாமல் அங்கீகரித்த சம்பந்தன் இப்போது சர்வாதிகாரம் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது. எதிர்வு கூறல்களாகச் சம்பந்தன் கூறிய எதுவுமே' இதுவரை நடக்கவில்லை. சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்றார். எதுவும் நடக்கவில்லை. இலங்கை அரசாங்கம் தொடர்பாக இந்தியா கடுமையான நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது என்றார். அதுவும் நடக்கவில்லை. இப்போது எந்தவித அடிப்படையும் இல்லாமல் 2015இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று சொல்கின்றார். மைத்திரிபாலவின் அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் எனக் கூறுவதற்கு எதுவித ஆதாரமும் இல்லாததால் வழமை போலத் தமிழ் மக்களைப் பேய்க்காட்டுவதற்குக் கதை விடுகிறார்.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகிய பின்னரே யாரை ஆதரிப்பது என்று தீர்மானிப்போம் என்று முதலில் சொன்னார்கள். மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எதுவுமே இல்லை என்பது தெளிவாகியதும் பேச்சு மாறியது. மக்களைத் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகளை அறிந்த பின்னரே முடிவைத் தெரிவிப்போம் என்றார்கள். எல்லாம் வெறும் பம்மாத்து என்பதைச் சம்பந்தன் இப்போது போட்டுடைத்துவிட்டார். சந்திரிகா தனக்கு அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே மைத்திரிபாலவுக்கு ஆதரவளிப்பதாக ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறினார். இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோதிலும் சந்திரிகா அளித்த எந்த வாக்குறுதியையும் இதுவரை நிறைவேற்றவில்லை. சந்திரிகாவை நம்ப முடியாது என்றும் அவர் ஒரு பொய்யரசி என்றும் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறியதையும் இப்போது நினைவுபடுத்த வேண்டும். சந்திரிகா தனிப்பட்ட முறையில் அளித்த வாக்குறுதியைப் பேரினவாதிகளை உள்ளடக்கிய மைத்திரிபாலவின் அரசாங்கம் நிறைவேற்றும் என்று எப்படி நம்புவது? அந்த வாக்குறுதி தான் என்ன?

சந்திரிகா அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே மைத்திரிபாலவைக் கூட்டமைப்பு ஆதரிக்கின்றது என்ற உண்மையைச் சம்பந்தன் அம்பலப்படுத்தியிருக்கின்றார். அப்படியானால் சம்பந்தன் இந்தியாவுக்குப் போவதற்கு முன்னரே இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். மைத்திரிபாலவை ஆதரிப்பது என்ற முடிவு அப்போதே எடுக்கப்பட்டுவிட்டது. உண்மை நிலை அவ்வாறிருக்க, தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பார்த்த பின்னரே முடிவு என்றும் மக்களைக் கலந்தாலோசித்துத் தீர்மானிப்போம் என்றும் தமிழ் மக்களுக்குப் படங்காட்டியது ஏன்?

இடைப்பட்ட காலத்தில் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சித் தலைமை மைத்திரி அணியுடன் பேரம் பேசியது என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது. இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்றோ தமிழ் மக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்படும் என்றோ இவர்கள் பேரம் பேசவில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் மைத்திரிபாலவுக்காகப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எவ்வளவு பணம் தர முடியும் என்று பேரம் பேசப்பட்டதாகச் சில வாரங்களுக்கு முன் ஒரு இணையத் தளம் செய்தி வெளியிட்டிருந்தது. ஆறு கோடி ரூபா கைமாறப்பட்டதாக அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது. இந்தத் தகவல்கள் உண்மையானால் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலனுக்காகப் பேரம் பேசவில்லை. கூட்டமைப்புத் தலைவர்களின் நலனுக்காகவே பேரம் பேசியது.

மைத்திரிபால சிறிசேனவாக இருந்தாலென்ன, அவரது அணியின் மற்றைய தலைவர்களாக இருந்தாலென்ன இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்கின்றார்கள். தேசிய அரசாங்கம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதே அது. தேசிய அரசாங்கம் எந்த அடிப்படையில் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்று சொல்ல இவர்கள் தயாராக இல்லை. குறைந்த பட்சம் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்வதற்குக்கூட இவர்கள் தயாரில்லை.

சொல்லுவார் சொன்னால், கேட்பாருக்கு மதி என்ன் என்பார்கள். மைத்திரிபாலவின் தேசிய அரசாங்க விடயத்திலும் இதுதான் நிலை.

தேசிய அரசாங்கம் அமையுமா என்பதே முதலில் கேள்விக் குறியாக இருக்கின்றது. 'மைத்திரிபால தேர்தலில் வெற்றியீட்டுவது முதலாவது தடை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற வேண்டியது இரண்டாவது தடை. இரண்டு தடைகளையும் தாண்டுவது சாத்தியமானதாகத் தெரியவில்லை. இரண்டு தடைகளையும் தாண்டித் தேசிய அரசாங்கம் அமைகின்றது என்று ஒரு வாதத்துக்குக்காக வைத்துக் கொண்டு பார்ப்போம்.

தேசிய அரசாங்கத்திடமும் தீர்வுத் திட்டம் இல்லை. கூட்டமைப்பிடமும் தீர்வுத் திட்டம் இல்லை. எனவே, கூட்டமைப்புக்கும் தேசிய அரசாங்கத்துக்குமிடையே ஆரம்பத்திலிருந்து பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் உள்ள பேரினவாதிகள் எங்கள் கோரிக்கைகளை ஏற்கமாட்டார்கள் என்பதால் அதில் பங்கு பற்றவில்லை என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறினார்கள். தேசிய அரசாங்கத்திலும் பேரினவாதிகள் தானே இருப்பார்கள்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்றும் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் தேவையற்றது என்றும் கூறும் ஜாதிக ஹெலஉறுமய தேசிய அரசாங்கத்தில் முக்கிய பங்காளி. மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜாதிக ஹெலஉறுமயவே தயாரித்தது என்றும் பேச்சு அடிபடுகின்றது. இலங்கை ஒரு பௌத்த, சிங்கள நாடு என்றும் இங்கு மற்றைய இனங்கள் வாழலாமேயொழிய உரிமை கேட்க முடியாது என்றும் இராணுவத் தளபதியாக இருந்தபோது கூறிய சரத் பொன்சேகாவும் தேசிய அரசாங்கத்தில் முக்கிய பிரமுகராக இருப்பார். தேசிய அரசாங்கத்துக்குத் தலைமை வகிக்கப் போகும் ரணில் விக்கிரமசிங்க பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லப்போவதில்லை எனக் கூறியதோடு பதின்மூன்றாவது திருத்தம் திருத்தப்பட வேண்டும் என்று சொன்னவர். பதின்மூன்றாவது திருத்தத்தை வெட்டிக் குறுக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

மைத்திரிபாலவின் தேசிய அரசாங்கம் பேரினவாதிகளின் செல்வாக்குக்கு உட்பட்டதாகவே இருக்கும். இதன் கீழ் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை. கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் இது விளங்கும். அதனால்தான் 2015இல் தீர்வு என்று மக்களிடம் போலி நம்பிக்கையை வளர்த்துத் தங்கள் காரியத்தைச் சாதிக்கப் பார்க்கின்றார்கள்.

மைத்திரிபாலவின் நிர்வாகத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை என்பது கூட்டமைப்புக்கு உடன்பாடான விடயம். அதற்காகவே இவர்கள் மைத்திரி பாலவை ஆதரிக்கின்றார்கள் என்றும் கூறலாம்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் கூட்டமைப்புத் தவிர்த்து வருகின்றது. அரசியல் தீர்வை விரும்பாததாலேயே பேச்சுவார்த்தைக்குக் கிடைத்த எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஏதாவது காரணம் சொல்லித் தட்டிக்கழித்தார்கள். அரசியல் தீர்வு இல்லாத நிலை தங்களுக்கு வாசியானது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் சிந்திக்கின்றார்கள். சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி எதுவுமே பேசாமல் இனப்பிரச்சினையைக் காட்டியே இலகுவாக வாக்குகளைப் பெற்றுத் தங்கள் பதவிகளைக் காப்பற்றிக் கொள்ளலாம் என்று கருதுகின்றார்கள். எந்தக் காலத்திலும் அரசியல் தீர்வுக்கு அக்கறை செலுத்தாமலிருப்பதற்கு இதுவே காரணம்.

இராணுவ பிரசன்னத்தை நீக்க வேண்டும், படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளைக் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இடைக்கிடை ஆர்ப்பாட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் செய்வதன் மூலம் அரசியல் தீர்வைப் புறந்தள்ளும் தங்கள் செயலைக் கூட்டமைப்புத் தலைவர்கள் மூடிமறைத்து வந்தார்கள். இப்போது அதற்கும் இடமில்லாமல் போய்விட்டது. இந்த விடயங்கள் பற்றிய பேச்சுவார்த்தைக்கான கதவை மைத்திரிபால மூடிவிட்டார்.



வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து படையினரை விலக்கப்போவதில்லை என்று மைத்திரிபால சிறிசேனவும் சம்பிக்க ரணவக்கவும் உறுதியாகக் கூறிவிட்டார்கள். படையினர் வசமுள்ள காணிகளுள் தேசிய பாதுகாப்புக்குத் தேவையான காணிகளைத் திருப்பிக் கொடுக்க முடியாது என்று மைத்திரிபாலவின் அணி கூறுகிறது. தேசிய பாதுகாப்புக்குத் தேவையான காணிகளைத் தீர்மானிப்பது யார்? படையினர் வசமுள்ள எல்லாக் காணிகளும் தேசிய பாதுகாப்புக்குத் தேவையானவை என்றும் சொல்லலாம் தானே.

**மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை. படையினரின் பிரசன்னம் மற்றும் படையினர் வசமுள்ள காணிகள் தொடர்பான பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை.**

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை. படையினரின் பிரசன்னம் மற்றும் படையினர் வசமுள்ள காணிகள் தொடர்பான பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் இப்படியான தடைகளைக் கொண்டிருக்கவில்லை. அரசியல் கட்சிகளினதும் சமூக அமைப்புகளினதும் ஆலோசனைகளைப் பெற்று அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்போவதாகக் கூறுகின்றார். தமிழ்த் தலைவர்களும் தங்கள் கருத்துகளை முன்வைக்க முடியும். பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களுக்கான ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம்.

கடந்த காலங்களில் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுப் பொதுமக்களின் காணிகள் உரியவர்களுக்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நடைமுறை தொடரும் என்பதை மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் உறுதிப்படுத்துகின்றது. வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடரும் என்று மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்.

எந்தப் பிரச்சினை தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குக்கூட இடமளிக்காத மைத்திரிபாலவின் அரசாங்கம் வேண்டுமா? அல்லது பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குக் கட்டங் கட்டமாகத் தீர்வைப் பெறக் கூடிய மகிந்தவின் அரசாங்கம் வேண்டுமா? மக்கள் நிதானமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.




# மஹிந்த சிந்தனை

## உலகை வெல்லும் வழி

### ஆய்வின் சாராம்சம்

2005ல் எமது சவால் நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டுவருவதே. 2010ல் நாட்டை பாரிய அபிவிருத்திக்கு உள்ளாக்கியுள்ளோம். இப்போது எமது தேவை சமாதானக் காற்றை சுவாசிக்கும் மக்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வை ஒழித்து அபிவிருத்தியின் பிரதிபலனைப் பெற்றுக்கொடுத்து அனைவரையும் மேம்படுத்தும் பயணத்தை ஆரம்பிப்பதேயாகும்.

இந்த மேம்பாடான நிலை எங்காவது எவ்வாறாவது சம்பாதிக்கும் பணத்தில் பைகளை நிரப்பிக்கொள்ளும் செல்வந்த நிலையல்ல. கஷ்டப்பட்டு தேடிய பணத்தினை கைகளில் வைத்துக்கொண்டு மனிதாபிமானத்தில் மனதை நிரப்பிக்கொள்ளும் மேம்பாட்டு நிலையாகும். உள்ளவர்கள் இல்லாதோரை இழிவாகப் பார்ப்பது, இல்லாதோர் இருப்போரை பொறாமையுடன் பார்க்கும் சமூகப் பாதையில் பயணித்த தூரம் போதுமானதே.

இனி உலை வைக்காத வீடு என்ற கடந்த கால நினைவுகள் பழமையான ஞாபகங்கள் மட்டுமே.

இனிமேல் எமது நாட்டில் செல்வந்தர்கள் மத்தியில் வேறுபாடுகள் இன்றி வறுமை செல்வந்தர் என்கின்ற பாரபட்சம் இருக்க வேண்டும். தம்மைப்பற்றி மட்டும் சிந்திக்கின்ற எண்ணங்களுக்கு மாறாக சமூக உணர்வுடன் கூடிய பொது சமூக சிந்தனைகளுடனான பெருமைமிகு இலங்கையராக செயற்பட்டுபொருளாதார பலனைப் பெற்றுக்கொள்ளும் புதிய இலங்கையரை நான் உருவாக்குவேன்.

அத்தகைய இலங்கையர் உலகை வெல்வர் என்பது எனது நம்பிக்கை.

## 1. தேசிய பாதுகாப்புத் தொடர்பாக பூலோக ரீதியான முன்னுதாரணம்

பயங்கரவாதம் கடந்த காலங்களுடன் நிறைவுபெற்றுவிட்டதே தவிர எதிர்காலத்தில் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்கள் இல்லையென்றே சிலர் காண்பிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். என்றாலும் உண்மை அதுவல்ல. புலிகள் ஐரோப்பிய மற்றும் மேலைத்தேய நாடுகளில் பிரிவினைவாதத்தை சுமந்துகொண்டு இன்னமும் தமது இரையைத் தேடி அலைவதை நான் காண்கின்றேன். அவர்கள் வெளிப்படையாக ஆயுதம் ஏந்தி போரிடவில்லை.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக உச்ச அளவில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் வெடிக்கும் ஒரு வெடிகுண்டு மூலம் எமது தேசத்தின் எதிர்கால பயணத்தை மீண்டும் பின்னோக்கித் திருப்பக் கூடும். இதனால் தாய்நாட்டின் தேசியபாதுகாப்பை உறுதிப்படுத்துவதானது பொருளாதார சமூக அபிவிருத்தி கட்டாயமான முன்நிபந்தனையாக உறுதியாக நம்புகிறேன். தேசிய பாதுகாப்பு என்பது இதுவரை தொடர்ச்சியாக எமது நாட்டில் வைத்திருந்த அதிகூடிய கவனம் இனிமேலும் பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்வேன் என நான் உறுதியளிக்கிறேன்.

தமிழ், முஸ்லிம், சிங்கள, மலே, பறங்கியர் உள்ளிட்ட அனைவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு நாட்டை நான் கட்டியெழுப்பியிருக்கிறேன். நீங்கள் இன்று அச்சத்திலிருந்து மீண்ட இதயத்துடன் மகிழ்ச்சியுடன் மனம் நிறைந்தவர்களாக வாழ்கிறீர்கள். எனினும் நான், தூங்காத கண்களுடன் எந்தவொரு இலங்கைப் பிரஜைக்கோ, எந்தவொரு இனத்துக்கோ, மதம் மொழி தொடர்பிலோ எந்தவித பேதமும் பார்க்கமாட்டேன் என்பதை நான் உறுதியளிப்பதுடன், சமூகத்தின் பொதுநலன் மற்றும் தேசத்தின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய இலங்கைக் கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். ஐக்கிய இலங்கை என்ற கொள்கைக்கு மாறான எந்தவிதமான கோரிக்கைகளுக்கோ அல்லது அழுத்தங்களுக்கோ இடம்கொடுக்க மாட்டேன்.

- **நிரந்தரமான வெளிநாட்டுக்கொள்கை**
- **உணவுப் பாதுகாப்புக்கு முதலிடம்**

## 2. முழுமையான அரசியல் மறுசீரமைப்பு - புதிய அரசியல் கலாசாரம்

1978இல் சரியான முறையில் கலந்துரையாடப்படாத எம்மீது சுமத்தப்பட்ட அரசியல்யாப்பு காரணமாக 36 வருடங்களாக நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். அதேநேரம் ஒருவருக்கு ஒருவர் ஏற்றுக்கொள்ளாத தற்கால திருத்தங்களை தற்போதைய அரசியல்யாப்பு விகாரமடைந்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதனால் மென்மேலும் தற்காலிக திருத்தங்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய புதிய அரசியல்யாப்பை ஒருவருட காலத்தினுள் நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

- **இலங்கை-இந்திய தத்துவார்த்த ரீதியான மரபுரிமையுடன் கூடிய நல்லாட்சி கொள்கைத்திட்டம்**
- **கூட்டு ஜனநாயகமும் சமூக ஆட்சி முறையும்**
- **பேச்சு சுதந்திரமும் ஊடகச் சுதந்திரமும்**

## 3. நற்பண்புகள் நிறைந்த சமூகம்

நாட்டின் பௌதீக அபிவிருத்தி மூலம் பெறுகின்ற வெற்றிகளை நற்பண்புகள் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே அவற்றை சரியான முறையில் பாதுகாக்க முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். நாம் உலகில் மிகப்பழமையான பாரம்பரிய விழுமியங்களின் சொந்தக்காரர்களாவோம். அது தொடர்பான பெருமை எமது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய சகலருக்கும் அதனால் நாம் இலங்கையர் என்ற வகையில் பெற்றுள்ள பாரம்பரிய வெற்றிகளை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதன் காரணம் எங்களது ஈடுஇணையற்ற பாரம்பரிய விழுமியங்கள் மீது கால் பதித்திருப்பதே. தேசத்தினை தொடராக மேம்படுத்தவும் முன்னேற்றவும் மாத்திரமல்லாமல் தேசிய ஒற்றுமை மற்றும் இணக்கப்பாடு தங்கியிருப்பது நாம் அந்த பாரம்பரிய மரபுரிமைகளுக்கு உயிரூட்ட எவ்வளவு தூரம் பங்காளியாகின்றோம் என்பதிலேயே தங்கியிருப்பதாக நாம் கருதுகிறோம். அந்த மரபுரிமைகளுக்கு உயிரூட்டுவதென்பது வேறொன்றுமல்ல. வரலாற்று ரீதியில் எம்மிடமுள்ள நற்பண்புகள் நிறைந்த சமூகத்தை மீளக்கட்டியெழுப்புவதேயாகும்.

- **சமய அபிவிருத்தி**
- **சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி**
- **பாதாள உலகக் குழு மற்றும் போதைக்கு நிலையான தடை**
- **ஜீவராசிகளுக்கு அன்பும் பாதுகாப்பும்**

## 4. நாட்டிற்காக உழைக்கின்ற தேசப்பற்றுள்ள அரச சேவை

தினமொன்றுக்கு பத்து ரூபா சம்பள உயர்வினை கோரி ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர் வர்க்கத்தினர் 24 மணித்தியாலத்துக்குள் வீட்டுக்கு அனுப்பிய, அரச சேவையை வீழ்ச்சியுறச் செய்து ஓய்வூதியத்தை இல்லாதொழிக்க முயற்சித்த வரலாற்றை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். மூலோபாய அரச தொழில் துறைகளை சீர்குலைத்து முக்கியமான அரச நிறுவனங்களை கொள்ளை இலாபத்துக்கு விற்றவர்கள் அவர்களே.

இவற்றைச் செய்வதற்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் வார்த்தைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட சம்பள உயர்வு வாக்குறுதிகளை வழங்கியதை எளிதில் மறந்துவிடமுடியாது. தனியார் மயப்படுத்துவதற்காக மக்கள் மயப்படுத்தல் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி அவர்கள் தமசேக் மயப்படுத்தல் பற்றி பேசி அரசசேவையை முழுமையாக அழிப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

இது அவர்களின் மறைமுகமான நிகழ்ச்சிநிரலை செயற்படுத்தவே என்பதை நான் சொல்லித்தெரியவேண்டியதில்லை. எனினும் அரச உரிமையை உறுதிப்படுத்தி அரச சேவையை மென்மேலும் பலப்படுத்தி வருடாந்த சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுக்க எம்மிடமுள்ள செயற்றிட்டங்களை நாம் ஒருபோதும் மாற்றம் செய்யப்போவதில்லையென உறுதியளிக்கின்றேன்.

ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான உரிமை, ஊழியர் சேமலாப நிதிக்கான உரிமை உட்பட அரச ஊழியர்களுக்கு உரித்தான சகல வரப்பிரசாதங்களையும் மேலும் பலப்படுத்தி அரச ஊழியர்களை கௌரவ பிரஜைகளாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

- **பெருமைமிகு இராணுவ வீரர்கள் மற்றும் கௌரவம் மிக்க பொலிஸார்**
- **அரச சார்பு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்**
- **வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் சென்றுள்ளவர்கள்**

## 5. செல்வந்த நாடு

வளம் நிறைந்த நாடாக இருந்த இலங்கைத் தீவு மேலைத்தேய ஆக்கிரமிப்புடன் வீழ்ச்சிக்கான கதவுகள் திறக்கப்பட்டன. 1948ல் நாங்கள் சுதந்திரம் பெற்ற போது எங்களுக்கே உரிய தன்னிறைவு பெற்ற பொருளாதாரம், நல்லாட்சி முறை, உயர் பாரம்பரியத்தைக் கொண்ட துறைசார் அறிவு மற்றும் செல்வம் மிக்க சமூக கலாசாரங்கள் முழுமையாக வீழ்ச்சியடைந்திருந்தன.

மஹிந்த ராஜபக்ஷ | X

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எங்களுக்கு பின்னடைந்த பொருளாதார பாதையான பழைய பாதையிலேயே பயணிக்க மீண்டும் வழிசெய்தது. எமது அரசாங்கத்தின் காலத்தில் கூட அதிலிருந்து விடுபடுவதற்கு நாங்கள் எடுத்த முயற்சிகள் முழுமையாக பூர்த்தி செய்ய முடியாமல் போனது என்பதை நான் இதயபூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

1977ல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதாரத்தின் ஊடாக நாட்டின் கதவுகள் உலகத்திற்குத் திறந்துவைக்கப்பட்டன. இதன் ஊடாக சிலபேர் மட்டும் அதிகளவு செல்வந்தர்களாகினர். ஆனால் பெரும்பாலானோர் வறுமைக்குள் தள்ளப்பட்டனர். சமூக ஏற்றத்தாழ்வு விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிலான வேறுபாடாக காணப்பட்டது. 1987ல் இளைஞர்களின் எழுச்சி வடக்கில் ஆயுதக் கிளர்ச்சி போன்றவை அனைத்தும் இந்த ஏற்றத்தாழ்வினால் எமது சமூக பொருளாதாரத்துக்கு பலவந்தமாக பாதிப்பை ஏற்படுத்திய மிகக் கொடூரமான நோயின் அறிகுறிகளாயின.

2005ல் நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதே எனக்கு சவாலாக இருந்தது. 2010ல் நாட்டை பாரிய அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதே எனது அடுத்த சவாலானது. இப்போது எமக்கு இருப்பது சமாதானத்தின் தென்றலை அனுபவிக்கும் மக்களுக்கு இல்லாதவர் இருக்கின்றவர்கள் என்ற இடைவெளியை நிரப்பி அபிவிருத்தியின் பலனைக் கொண்டு சகலரையும் செல்வந்தராக்கும் அந்த பயணத்தை ஆரம்பிப்பதேயாகும். இந்த செல்வந்தர் ஆக்குவோம் என்பது எப்படியாவது எங்காவது தேடிக்கொள்ளும் பணத்தில் பொக்கட்டுக்களை நிரப்பிக் கொள்ளும் செல்வந்தன் என்பது அல்ல. உழைப்பினால் சம்பாதிக்கும் பணத்தை கைநிறைய வைத்துக்கொண்டு மனிதத்தன்மையை இதயத்தில் நிரப்பிக்கொண்ட செல்வந்தரையே குறிப்பிடுகின்றேன்.

இருப்பவர்கள் இல்லாதவர்களை கீழ்த்தரமாகப் பார்க்கக் கூடிய இல்லாதவர்கள் இருப்பவர்களைப் பார்த்து பொறாமைப்படக்கூடிய சமூக பாதையில் பயணித்துவந்த தூரம் இனி போதுமானது. உலை வைக்காத வீடென்பது கடந்த கால நினைவுகளில் பழங்கதையாகிப்போன ஒன்று. இனிமேல் எமது நாட்டில் செல்வந்தர்கள் இடையே வேறுபாடு இருக்க வேண்டுமே தவிர ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு அல்ல. தன்னைப்பற்றி மட்டும் சிந்திக்காத சமூகத்தைப் பற்றிய எண்ணங்களைக் கொண்ட பெருமைமிகு இலங்கையர் என்பதற்காக கஷ்டப்பட்டு உழைத்து அதன் பொருளாதார பிரதிபலனைப் பெறுகின்ற ஒரு நவீன இலங்கையரை நான் உருவாக்குவேன்.

2016ஆம் ஆண்டாகும் போது தனிநபர் வருமானத்தை 4000 அமெரிக்க டொலர்களாக உயர்த்துவேன் என 2010ஆம் ஆண்டில் நான் உங்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தேன். நான் அளித்த அந்த வாக்குறுதியை 2015ஆம் ஆண்டே நிறைவேற்றுவேன். இதனை செய்ய முடிந்ததையிட்டு பெருமையடைகிறேன். இதேபோன்று 2020ஆம் ஆண்டு ஆகும்போது அபிவிருத்தி வேகத்தை தொடர்ச்சியாக 7 வீதத்தைவிட அதிகரித்து செல்வதுடன் நாட்டில் தனிநபர் வருமானத்தை 7500 அமெரிக்க டொலர்கள் வரை அல்லது 10 இலட்சத்துக்கும் அதிகமான ஒரு மட்டத்திற்கு இட்டுச்செல்வதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். இதனூடாக 20 மில்லியன் மக்களை செல்வந்தர்கள் தரத்துக்கு உயர்த்துவேன்.

- **சூழலுக்கு சாதகமான உயர்தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய அணுகுமுறை**
- **விளைச்சலுக்கு காணிகள்**
- **மரஞ்செடி கொடிகள் மற்றும் வனஜீவராசிகளுக்கு தண்ணீர்**
- **யாழ்ப்பாணத்துக்கு ஆறு - ஆனையிறவுக்குக் குளம்**
- **நாடு முழுவதற்கும் தண்ணீர்**
- **விளைச்சலுக்குத் தேவையான விதை மற்றும் உர வகைகள்**
- **விவசாயிகளுக்கு மூலதனம்**
- **விளைச்சல் மற்றும் சந்தை வாய்ப்பு**
- **பழங்கள் மற்றும் மரக்கறி உற்பத்தி**
- **கால்நடை அபிவிருத்தி வேலைத்திட்டம்**
- **தெங்கு உற்பத்தி**
- **பெருந்தோட்ட பொருளாதார தொழில்நுட்பத் துறை**
- **நனவான பட்டுப்பாதை கனவு**
- **மீனவ சமூகத்துக்கு புதிய வாழ்க்கை**

## 6. தேசிய தொழில் நிகழ்ச்சி நிரல்

விவசாயத்தைப்போன்று கைத்தொழில் துறையிலும் நாட்டை முன்னேற்றுவதே எதிர்வரும் வருடங்களில் எனது இலக்காகும். அதற்காக நாட்டின் பொருளாதாரத்துக்கு வழிகாட்டியாக முக்கியமான கைத்தொழில் துறைகளை இனங்கண்டு அந்த கைத்தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட தடைகளை நீக்கி அவர்களை ஊக்கப்படுத்துதல். 3 இலட்சம் தொழில்வாய்ப்புக்களையும் ஜீவனோபாய வாய்ப்புக்கள் 5 இலட்சத்தையும் ஏற்படுத்துதல். தேசிய கைத்தொழில் நிழ்ச்சி நிரலை தயாரித்தல். அதற்கு ஏற்ற வகையில் புதிய சட்டதிட்டங்களைக் கொண்ட கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல். அது தொடர்பாக முழுமையான அதிகாரங்களைக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி சட்டமூலமொன்றைக் கொண்டுவருவேன்.

- **பாரிய கைத்தொழில்துறைக்கு உதவுதல் சுற்றுலாத்தொழில்துறை**
- **நிர்மாண தொழில்துறை நடவடிக்கை முறை**
- **ஆடைக் கைத்தொழிலில் திருப்புமுனை**
- **மூலோபாய கைத்தொழில் கட்டமைப்பு**
- **சீனிக் கைத்தொழில்**
- **பால் உற்பத்தி - வெண்மைப் புரட்சி**
- **நடுத்தர அளவான கனிப்பொருள் கைத்தொழில் தொகுதி**
- **சிறு வியாபார அபிவிருத்தி செயற்திட்டம்**
- **பாரம்பரிய உரிமைகளின் ஊடாக நவீன சந்தையை வெற்றி கொள்ளல்**

## 7. அபிவிருத்தியின் சிறந்த பலன்கள் கிராமங்களுக்கு கொண்டு செல்லும் திவிநெகும

- **திவிநெகுமவின் மூலம் அழகான நகரம் தரமான கிராமம்**
- **நிறைவான வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்**
- **சுயவேலைவாய்ப்பு பாதுகாப்பு வேலைத்திட்டம்**

## 8. தேசிய ஆளுமை மிக்க கல்வி

நாடொன்றின் ஆளுமை என்பது அந்நாட்டின் மொழியை அடிப்படையாகக் கொண்ட விழுமியக் கட்டமைப்பை உள்வாங்கிய தேசிய வேலைத்திட்டமாகும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகள் பூகோள ரீதியாக அல்லது இன ரீதியாக அவற்றுக்கு அப்பால் சென்று அந்நாடுகளின் தேசிய ஆளுமை அடிப்படையிலேயேதான் தம்மை அடையாளப்படுத்துகின்றன. 30 வருட யுத்தம் காரணமாக எம்மிடமிருந்து இந்த தேசிய ஆளுமைதான் பிடுங்கி எடுக்கப்பட்டிருகின்றது என நான் நம்புகிறேன். பூகோள மயமாக்கல் செயற்பாட்டில் வீழ்ச்சியடைந்திருந்த இந்த தேசிய ஆளுமையை ஒரே வீச்சில் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனால், இன்று எமக்கு மிகப் பாரிய ஆளுமைமிக்க தேசியத்துவமே தேவைப்படுகின்றது. அதனால், இன்று பிறக்கின்ற பிள்ளைகளுக்கு வரலாற்று மரபுரிமை மற்றும் பெறுமதிகள் நிறைந்த நவீனத்துவத்தின் மூலம் சர்வதேசத்தை வெற்றிக் கொள்ளக்கூடிய கல்விமுறைமை அத்தியாவசிமானது என நான் தீவிரமாக நம்புகிறேன்.

- **முன்பள்ளி புரட்சி**
- **சகலருக்கும் சமமான அறிவுப் பாக்கியம்**
- **கணிதத் தடையை உடைத்தெறிதல்**
- **வரலாற்று அறிவுப் புரட்சி**
- **விசேட தேவை உடைய பிள்ளைகளுக்கு சிறப்பாக**
- **நீண்ட காலம் தங்கியிருந்து சிகிச்சை பெறும் பிள்ளைகளுக்கு கல்வி**
- **சமய நெறியைப் பாதுகாக்கும் கல்வி**
- **விண்ணையும் கடலையும் வெற்றிகொள்ளும் உத்தம பரம்பரை**
- **உத்தம ஆசிரியப் பரம்பரைக்கு**

## 9. நோயற்ற வாழ்வு குறையற்ற செல்வம்

சௌபாக்கியத்தின் அடிப்படையே நோயற்ற சமூகம். 2006 ஆம் ஆண்டிலிருந்து சுகாதாரத்துறைக்கு அரசாங்கம் பெருந்தொகையான முதலீடுகளைச் செய்துள்ளது. இதனால் கிராமிய பிரதேசங்களில்கூட சுகாதார சேவை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று எஞ்சிய 6 வருடங்களுக்குள் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஈடான சுகாதார சேவையொன்றை உங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நான் கட்டுப்பட்டுள்ளேன்.

- **எமது சுதேச வைத்தியத்துறையின் மீள் எழுச்சி**
- **பெருந்தோட்டத்துறையின் ஆரோக்கியம்**

## 10. நீண்ட ஆயுளைத் தரும் விளையாட்டு

நீண்ட ஆயுளுடன் கூடிய எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்காக இதுவரை இளம் பராயத்தினருக்கு மட்டுமே என எண்ணிக்கொண்டிருந்த விளையாட்டு இன்று சகலருக்கும் அவசியமான ஒன்றாக கவரக்கூடிய விதத்தில் அதனை மேம்படுத்துவதன் மூலம் சிறந்த எதிர்கால முதலீடு என நான் நம்புகிறேன்.

## 11. பெண்களுக்கு வளமான எதிர்காலம்

எமது நாகரீகம் தொடர்வதற்கும் வரலாற்று ரீதியாக அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் உறுதுணையாக இருந்தது யசோதரா தேவியின் முன்னுதாரணத்துடன் கூடிய உத்தம பெண்கள் பரம்பரையே என நான் திடமாக நம்புகிறேன். பிள்ளைகள் பிறந்த நாள் முதல் நித்திரையின்றி அந்தக் குழந்தைகள் நோய்வாய் படாமல் பாதுகாத்து, விளை நிலங்களிலும் வயல் வெளிகளிலும் வேலைசெய்து பெருந்தோட்டப் பகுதியில் தேயிலை கொழுந்து பறித்தும், ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளில், மத்திய கிழக்கு நாடுகளில் சேவைசெய்துவரும் தமிழ், முஸ்லிம், சிங்கள, பறங்கியர், மலே இனங்களைச் சேர்ந்த உத்தம பெண்கள் சமூகத்தினாலேயே மனிதத்துவமும் எமது நாகரீகமும் பாதுகாக்கப்படுகிறது. யசோதரா தேவியின் பரம்பரையில் உதித்த தாய்மார் இல்லையானால் எமது தாய்நாட்டைக் காக்கக்கூடிய மனத்திடம் உள்ள படையினர் கிடைத்திருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

## 12. இளைஞர் சக்தியால் நிறைந்த நாடு

ஒரு காலத்தில் இந்த நாட்டிலே இளைஞர்கள் முழுமையாக கைவிடப்பட்டிருந்தார்கள். இதன் பலனாக அவர்கள் வன்முறை அரசியலில் ஈடுபட்டதால் லட்சக்கணக்கானோர் மரணமடைந்தனர். அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள், இன்னும் அந்த கவலையில் இருப்பதை நான் அறிவேன்.

2005ம் ஆண்டிலிருந்து தமக்கு எதிர்காலம் ஒன்று வேண்டுமென்று இருபது இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர் பரம்பரை ஒன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பான நீலப்படையணியில் சேர்ந்திருப்பது அந்த இருண்ட கடந்த காலத்தை விரும்பாததன் காரணத்தால்தான் என்பதை நான் அறிவேன். அந்த இளம் பரம்பரைக்கு தேசிய அபிமானத்தின் மனதில் நினைத்துக்கொண்டு மன நிறைவு மிக்கதாக எழுப்பக்கூடிய நாடொன்றை நான் உங்களுக்கு உரிமையாக்கிக் கொடுப்பேன்.

- **ஆற்றல் மற்றும் தொழில்**
- **இளைஞர்களுக்கு ஐந்து இலட்சம் தொழில் வாய்ப்புகள்**
- **இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு கைகொடுத்தல்**

## 13. வசதியான போக்குவரத்து

பொது போக்குவரத்தை தான் எப்போதும் ஒரு பயணியாகவே பார்க்கின்றேன். பயங்கரவாதிகளினால் குண்டு வைக்கப்பட்டு, தண்டவாளங்கள் கழற்றப்பட்ட பின்னர் 30 வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த யாழ் தேவி தனது பயணத்தை மிகவும் பெருமையுடன் ஆரம்பித்தது. நான் அதில் பயணம் செய்தேன். இரு புறமும் குழுமியிருந்த அந்த மக்களின் முகங்களில் நான் மகிழ்ச்சியைக் கண்டேன். அவர்களின் உள்ளங்கள் பூரித்து நின்றதை அவர்களின் முகங்களில் இருந்த மலர்ச்சியின் ஊடாக நான் கண்டேன். சொகுசு வாகனங்களில் பயணம் செய்யும் ஒரு நபரும், சாதாரண பொது போக்குவரத்தில் ஈடுபடும் ஒரு நபரும் சமமான ஒரு சொகுசுப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒரு போக்குவரத்து சேவையை நான் உருவாக்குவேன்.

- **வீதி விபத்துக்கள் அற்ற நாடு**
- **அலைச்சலைத் தடுப்போம்**

## 14. உயிரிலும் மேலாக பாதுகாக்கப்படும் சுற்றாடல்

மனிதன் சுற்றாடலை சீரழிப்பதற்காக மேற்கொள்கின்ற செயற்பாடுகளின் விளைவுகளை எதிர்காலப் பரம்பரையினர் தான் செலுத்த வேண்டும். ஆனால் அச் சூழலை எமது எதிர்கால பரம்பரையினரும் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனால் மனிதனுக்கும் இயற்கைக்குமிடையில் நிலவ வேண்டிய நெருங்கிய தொடர்பு வீழ்ச்சி அடையாத வகையில் 2005ல் மஹிந்த சிந்தனையில் வழங்கிய உறுதிமொழிக்கேற்ப எதிர்காலத்திலும் நாம் சுற்றுச் சூழலின் பாதுகாவலனாக செயற்படுவேன்.

- **எம்மைக் காக்கும் வனாந்தரங்கள்**
- **பஞ்சகேந்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரகடனம்**
- **யானை மனிதன் முரண்பாடு**

## 15. நிலையான மக்கள் இல்லம்

இலங்கையில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் வீட்டு உரிமையைக் கொண்ட குடும்பமாகத் திகழ வேண்டும், என்ற அடிப்படையில் தேசிய வீடமைப்பு கொள்கையை வெளியிடக் கிடைத்தமை வீடமைப்பு மற்றும் குடியிருப்பு துறை தொடர்பாக நாம் பெற்றிருக்கும் பாரிய வெற்றியாகும். இதன் கீழ் வீடற்ற குடும்பங்களுக்காகவும் எதிர்காலப் பரம்பரையினருக்காகவும் வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை முழு நாட்டிலும் ஒன்றிணைந்த வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்துவேன்.

- **நடுத்தர வர்க்கத்தினருக்கு மாடி வீட்டு உரிமை**

## 16. உட்கட்டமைப்பு வசதிகள் புரட்சி தொடர்ந்தும் முன்னோக்கி

பயங்கரவாதம் காரணமாக வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாமல் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தடைப்பட்டிருந்தது. அதனால் நாளாந்தம் எமது கண்கள், தீமூட்டி எரிக்கப்பட்ட கட்டடங்களையும் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட பாதைகளையும் உடைத்து வீழ்த்தப்பட்ட மின்கம்பங்களையும் பார்த்தன. ஊருக்கு எந்தவிதமான வசதியும் கிடைக்காததுடன் நகரம் குப்பைகளாலும் தூசிகளாலும் சுத்தமற்றதாக நிரம்பியிருந்தது. நான் அடிப்படை பொது வசதிகள் துறையில் குறிப்பிடத்தக்க புரட்சியை ஏற்படுத்தினேன். நான் இந்த கண்களால் நம்பமுடியாத புரட்சியை முன்னோக்கியே கொண்டுசெல்வேன்.

- **அழகான நகரம்**
- **பாரிய பாதை புனரமைப்பு**
- **அனைவருக்கும் தண்ணீர்**
- **எரிசக்தி**
- **பெற்றோலிய கைத்தொழில்**
- **மின்சக்தி**
- **பொதுசன மற்றும் தகவல் தொழில்நுட்பம்**
- **செய்மதி தொழில்நுட்பத் துறையை விரிவுபடுத்தும் வலையமைப்பு**

## 17. விஞ்ஞான தொழில் நுட்பமும் புதிய உற்பத்திகளும்

நாம் இப்போது வேகமான பொருளாதார அபிவிருத்தியில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். புத்தெழுச்சி பெறும் ஆசியாவில் முதலாமிடத்தை வெற்றிக்கொள்வதாயின் நாம் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் முன்னணியில் திகழவேண்டும்.

## 18. கலைஞர்களின் திறன்களை நாட்டுக்கு வழங்குதல்

அனுபவிப்பதைவிட அனுபவிக்க வைக்கும் உரிமைக்கு இட்டுச்சென்ற இருண்ட யுகத்தில் திரைக்கூடங்கள், நாடக அரங்குகள், இசை கச்சேரி மேடைகள் என்பன பாழடைந்து கிடந்தன. அன்றைய காலகட்டத்தில் அரங்கேறியிருந்தது மரண அச்சுறுத்தல் மாத்திரமே. நான் தேசிய உறுதிப்படுத்தினேன். இன்று தாமரைத்தடாகத்தில் ஆயிரக்கணக்கான கலை மலர்கள் மலர்கின்றன. இங்கு திரைப்படங்களும் நாடகங்களும் போட்டி போட்டுக்கொண்டு அரங்கேறுகின்றன. எழுத்தாளர்களும் வாசிப்பு ஆற்றல் உள்ளவர்களும் அதிகரித்துள்ளனர். கலை என்ற அறுவடையை அள்ளிக் குவிக்கும் நேரமிது.

- **இலக்கியம்**
- **நடனக் கலை**
- **சினிமா**
- **மூத்த கலைஞர்கள்**

## 19. சமூகப் பாதுகாப்பு

முதுமையடைந்த பெற்றோரைப் பராமரிப்பது வளர்ந்த பிள்ளைகளாகும். அது எமது நாட்டில் உள்ள சமூகப் பாதுகாப்பு முறைமையாகும். என்றாலும் தற்போது உருவாகியுள்ள சில ஏற்ற தாழ்வுகள் காரணமாக சிலர் கையறு நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை நான் அறிவேன். முதுமையடையும் போது ஏற்படுகின்ற தனிமை உணர்வு அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுகிறது. அதனால் அனாதரவாகியுள்ளவர்களுக்கும், சிரேஷ்ட பிரஜைகளுக்குமான பாதுகாப்பான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பேன்.

- **இடர்முகாமைத்துவம்**
- **போதையினால் அனாதரவானோர்**

## 20. சமாதானத்தின் நல்லிணக்கப் பயன்கள் மக்களுக்கு

**மஹிந்த சிந்தனையின் முன்மாதிரி உலகிற்கே**
2005 இல் மஹிந்த சிந்தனையை முன்வைத்தபோது எந்த நாட்டுக்கும் தனியாக எழுந்து நிற்க முடியாது என்ற கருத்துணர்வைக் கொண்டிருந்த சர்வதேச நிறுவனங்கள் இன்று தனியார் மயப்படுத்தலுக்குப் பதிலாக முகாமைத்துவ மாற்றங்கள் மேற்கொள்வது தொடர்பில் ஆலோசனை வழங்கும் பிரிவுகளை ஆரம்பித்திருப்பது எம்மை முன்மாதிரியாகக் கொண்டாகும். அதனால் தமது நாட்டின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற விரும்பும் நாடுகளுக்கு மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்படும் விதம் குறித்து வழிகாட்டுவதற்காக மஹிந்த சிந்தனை செயலாளர் அலுவலகமொன்றை ஸ்தாபிப்பேன்.

**உங்கள் அனைவரினதும் மக்கள் ஆணையுடன் இவை**
**அனைத்தையும் யதார்த்தமாக்க எனக்கு உங்கள் அனுமதி,**
**ஒத்துழைப்பு மற்றும் சக்தி தேவை.**
**நாம் வென்ற நாட்டை கட்டியெழுப்பிய பண்பர்ன தாய்நாட்டை**
**ஆசியாவின் ஆச்சர்யத்தை**
**மற்றும்**
**உலகை வெல்லும் அபிமானமான தேசமாக மாற்றுவோம்.**
**நான் உங்களுக்கு பாதுகாப்பான நாட்டில்**
**வளமான எதிர்காலத்தை ஏற்படுத்துவேன்.**

*www.mahinda2015.com/mahinda-chinthana.html*

# பாதுகாப்பான தேசம்
## வளமான எதிர்காலம்

# வெலிங்டன் டெஸ்டில் இலங்கை திணறல்

(வெலிங்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி திணறி வருகின்றது.

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நியூசிலாந்தின் வெலிங்டனில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி, லக்மல், பிரதீப் பிரசாத் ஆகியோரின் வேகப்பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் வில்லியம்ஸன், ரெய்லர், ருதிர்பொர்ட் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி கௌரவமான நிலையைப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 115 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 69, ரெய்லர் 35, ருதிர்பெர்ட் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீப் 63 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, லக்மல் 71 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, பிரசாத் 50 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி நியூசிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வருகின் றது. குறிப்பாக, பிறவ்ஷிவெல்லின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் விக்கெட்டைத் தாரை வார்த்தனர். இருப்பினும் மறுபுறம் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார பொறுப்புடன் ஆடி வருகின்றார். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் குமார் சங்கக்கார 58 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 33 ஓட்டங்க்ளைப் பெற்றுள்ளார். மற்றும் கருணாரட்ன 16, கப்டன் மத்தியூஸ் 15 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பிறவ்ஷிவெல் 23 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். ஐந்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 143 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். ஏற்கனவே, நடைபெற்ற முதல் போட்டியில் நியூசிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## வெற்றியளிக்கட்டும்; அமைச்சரின் புதிய முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 60 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டை முன்னிட்டு எந்தவொரு தேசியத்திட்டமும் முன்னெடுக்கப்படாத நிலையில் அந்தக் குறையை புதுவருடத்தில் தீர்த்துவைக்கவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் பயிற்சிகள், விளையாட்டுத்துறைக் கல்வி உட்பட 45 விடயங்களை மேம்படுத்தும் பொருட்டு குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால தேசிய திட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய விளையாட்டுத்துறை கொள்கைத் திட்டம் இவ் வருடம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொள்கையின் கீழ் விளையாட்டுத்துறை அருங்காட்சியகம், சர்வதேச தரம் மிக்க விளையாட்டுத்துறை பாடசாலை என்பன இவ் வருடம் அமைக்கப்படவுள்ளன. மேலும் சர்வதேச பதக்கங்கள் வெல்லக்கூடியவர்களை 6ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் வரை விளையாட்டுத்துறை பாடசாலையில் இணைக்க எண்ணியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் அமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட 9 விளையாட்டுத் தொகுதி மைதானங்களும் 25 மாவட்ட விளையாட்டு மைதானங்களும் இந்த வருட முடிவுக்குள் நிறைவுபெறும் என்றும் விளையாட்டுத்துறை விஞ்ஞான பாடத்திட்டம் பட்டப் படிப்பு வரை நீடிக்கப்படும் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தெற்காசிய, ஆசிய, பொதுநலவாய, ஒலிம்பிக் ஆகிய விளையாட்டு விழாக்களில் பதக்கங்கள் வென்றெடுப்பதை இலக்காகக் கொண்டு எதிர்காலத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கான காத்திரமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அதற்கான வளங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் அவர் குறிப்பிட்டார்.



## சங்கா சாதனை

(வெலிங்டன்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் குறைந்த இனிங்ஸ்களில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையை இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தன்வசப்படுத்தியுள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிராக நேற்று வெலிங்டனில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் ஆறு ஓட்டங்களைப் பெற்றவேளை சங்கக்கார இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். 224 இனிங்ஸ் போட்டிகளில் ஆடியுள்ள சங்கக்கார 12028 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதற்கு முன்னார் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், அவுஸ்ரேலியாவின் ரிக்கி பொண்டிங் ஆகியோர் 247 இனிங்ஸ்களில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் என்ற சாதனையைக் கொண்டிருந்தனர். இதேவேளை, தென்னாபிரிக்காவின் கலிஸ் 249 இனங்ஸ்களிலும், இந்தியாவின் ராகுல் ராவிட் 255 இனிங்ஸ்களில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**டெஸ்ட்டில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தோர்**

| பெயர் | போட்டிகள் | இனிங்ஸ் | ஓட்டங்கள் | சதம் |
|---|---|---|---|---|
| சச்சின் (இந்தியா) | 200 | 329 | 15921 | 51 |
| பொண்டிங் (ஆஸி.) | 168 | 287 | 13378 | 41 |
| கலிஸ் (தென்னாபிரிக்கா) | 166 | 280 | 13289 | 45 |
| ராவிட் (இந்தியா) | 164 | 286 | 13288 | 36 |
| சங்கக்கார (இலங்கை) | 130 | 224 | 12028 | 37 |

## விளையாட்டுச் செய்திகள்

## ஊக்கமருந்து பாவனை; புதிய விதி அமுல்

(லண்டன்)

விளையாட்டு வீரர், வீராங்கனைகள் ஊக்கமருந்து உபயோகித்தமை உறுதி செய்யப்பட்டால், குறைந்தபட்சமாக 4 ஆண்டுகளுக்கு போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கும் வகையில் புதிய விதி முறை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளது. இது குறித்து உலக ஊக்கமருந்து தடுப்புக் கழகம் டபிள்யு.ஏ.டி.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், செயற்றிறனை மேம்படுத்துவதற்காக ஊக்கமருந்து உபயோகிக்கும் வீரர், வீராங்கனைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் எந்தவிதமான தொய்வும் இருக்காது. பரிசோதனையில் ஊக்கமருந்து உபயோகித்தமை உறுதி செய்யப்பட்டால், குறைந்தபட்சமாக 2 ஆண்டுகளுக்கு தடை செய்யப்படும் என்ற விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தவறு செய்யும் வீரர், வீராங்கனைகள் இனி 4 ஆண்டுகளுக்கு எந்த போட்டியிலும் பங்கேற்க முடியாது.

இந்த புதிய விதிமுறை உடனடியாக அமுலுக்கு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆக்ரோஷம் நீடிக்க வேண்டும்; ஹோலிக்கு ஜோன்சன், விவியன் பாராட்டு

(சிட்னி)



ஹோலியின் தலைமையில் இந்திய அணி ஆக்ரோஷமாக விளையாடும் என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி பொதுவாக ஆக்ரோஷத்துடன் ஆடும் அணி அல்ல. ஆனால், நான் ஹோலியின் ஆட்டத்தை ஆரம்பத்தில் இருந்தே பார்த்து வருகிறேன். அவரது ஆட்டத்தில் அனல் பறக்கிறது. எனவே, அவரது தலைமையின் கீழ் இந்திய அணி போராட்ட குணத்துடன் ஆடும். ஹோலியின் களத்தடுப்புச் செய்யும் விதத்தில் இருந்து பல விடயங்கள் டோனியிடம் இருந்து மாறுபடும்.

ஹோலி ஒரு போராட்டமான வீரர். அனைத்து விதத்திலும் தன் பெயர் பதியப்பட வேண்டும் என விரும்புபவர். யாருக்கு எதிராக ஆடுகிறோம் என்பதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்படுவதில்லை. எதையும் முகத்துக்கு நேராக வெளிப்படுத்தி விடுகிறார். அவர் எங்களுக்கு எதிராக குவித்த ஓட்டங்களைப் பற்றிச் சொல்கிறார். நாங்கள் 2-0 என முன்னிலையில் இருப்பதைச் சொல்கிறோம். இது ஆட்டத்தின் ஒரு அங்கமே எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஹோலியின் ஆக்ரோஷம் நீடிக்க வேண்டும் அவரின் அணுகுமுறை என்னைக் கவர்ந்துள்ளது என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஹோலியின் ஆட்டத்தை நான் மிகவும் நேசிக்கிறேன். நவீன யுக வீரரான அவரது துடுப்பாட்ட ஆக்ரோஷம் தொடர வேண்டும். அவர் இரசிகர்களுக்கு சிறந்த போட்டியை உருவாக்கி மகிழ்விக்கிறார். அவரது ஆட்ட முறையை இரசிகர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

ஆடுகளத்தில் அவரை வெறுப்பேற்றுவது சிறந்த ஆட்டத்துக்கு உதவு கிறது. அவரது இந்த மோதல் போக்கும் நீடிக்க வேண்டும். அவர் நடந்து கொள்ளும் விதத்தில் எந்தத் தவறும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணிக்கெதிராக தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரில் ஹோலியின் துடுப்பாட்டம் மிகவும் அபாரமாக இருந்து வருகிறது. 3 டெஸ்டில் 6 இனிங்ஸில் விளையாடி 499 ஓட்டங்கள் குவித்துள்ளார். சராசரி 67.00 ஆகும். இதில் 3 சதமும், ஒரு அரை சதமும் அடங்கும்.

## டோனி ஓய்வு; அப்ரிடி ஏமாற்றம்

டோனி டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றதாக வெளியான தகவல் ஏமாற்றம் அளிக்கிறது. டோனி ஒரு போராட்ட குணம் நிறைந்தவர். அவர் இந்திய கிரிக்கெட்டின் சிறந்த கப்டன் என பாகிஸ்தான் அணியின் அதிரடி வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

டோனி இந்திய கிரிக்கெட்டின் முகத்தை மாற்றியவர். அவரது தலைமையின் கீழ் இந்திய அணி வெற்றிகளின் உச்சத்துக்கு சென்றது. இனி இந்திய அணி அவரை மிஸ் செய்யும். ஹோலியின் கிரிக்கெட் திறமைக்கு நான் இரசிகன். அவரது ஆக்ரோஷ ஆட்டம் மதிக்கப்படவேண்டும். ஆனால், அவர் களத்தில் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவார். எனவே, டோனி விட்டுச் சென்ற தலைமை இடத்தை நிரப்ப, ஹோலிக்கு சிறிது காலம் ஆகலாம்.



## 4ஆவது டெஸ்ட்டில் ஜோன்சன் அவுட்?

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்திய, அவுஸ்ரேலியா அணிகள் மோதும் இறுதி டெஸ்ட் போட்டி சிட்னியில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. இந்நிலையில், ஜோன்சன் (தொடையின் பின்பகுதி) காயத்தால் அவதிப்படுகிறார். இதனால், இவர் நான்காவது போட்டியில் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஒருவேளை, இவர் பங்கேற்கவில்லை எனில், இவருக்குப்பதில் ஸ்டார்க் அல்லது பீற்றர் சிடில் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

www.mahinda2015.com



# படைத்திடுவீர் எதிர்காலமதை

பெருமைக்குரிய நம் தாய் மண்ணின் நலனுக்காக, பெறுமதிமிக்க உங்கள் வாக்கினை வழங்கிடுங்கள்.

பாதுகாப்பான தேசம்
வளமான எதிர்காலம்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வெளிவிவகார அமைச்சு அதிருப்தி

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் உள்விவகார்ரம் ஒன்று தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை விடுத்துள்ளமை ஆச்சரியமளிப்பதாக தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சு, இவ்வாறான அறிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீட்டிற்கான நோக்கம் மற்றும் பக்கச்சார்பு குறித்து கேள்வியை உருவாக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு தேர்தல் குறித்து வெளிநாடுகள் தேர்தல் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக அறிவுரைகளை வெளியிட முடியாது என்றும் இலங்கை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் எவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கருத்து வெளியிட்டிருந்தது.

உள்நாட்டு தேர்தல்கள் தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் கருத்து வெளியிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. உள்நாட்டு விவகாரம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கருத்து வெளியிட்டமை ஆச்சரியமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் ஓர் சுயாதீன அதிகாரி எனவும், சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் தேர்தலை நடாத்த சகல வசதிகளும் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

1931ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தேர்தல்கள் நடாத்தப்பட்டு வருவதாகவும், ஜனநாயக ரீதியில் இலங்கையில் நீண்ட காலமாக தேர்தல்கள் நடாத்தப்பட்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## 2014இல் 27 ஆயிரம் வீடுகள் இந்திய அரசால் நிர்மாணம்

இந்திய அரசின் நிதி உதவியில் கடந்த 2014 ஆம் ஆண்டில் 27 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்துள்ளன என இந்தியத் துணைத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 555 வீடுகளும், கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 447 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக வடக்கில் 162 நிர்மாணிக்கப்பட்டும் உள்ளன. 2010 யூனில், இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்குமாறு கேட்டார். இதற்கமைய வடக்கு, கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க 30 பில்லியன் இலங்கை ரூபாவை ஒதுக்கீடு செய்தது. இதேவேளை இந்த ஆண்டில் 19 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படுவதுடன், 7 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பொது எதிரணி வெற்றிபெற்றால் நாடு ஆபத்தை எதிர்நோக்க நேரும்

## ஜீ.எல். பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

பொது எதிரணியினர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால் நாடு பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்பதே பொது எதிரணியின் நோக்கமாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் புலிகளினால் ஆயுதங்களின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாமல் போன தமிழீழத்தை அரசியல் ரீதியான இணக்கப்பாடுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பொது எதிரணியின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தரப்பினருக்கு இடையில் கடுமையான கருத்து முரண்பாடு நிலவி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.


மாகாணசபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்து வருவதாகவும் மறுபுறத்தில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, ஆளுநரின் அதிகாரத்தை அதிகரிக்க வேண்டுமென ஜாதிக ஹெலஉறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க கோரி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனத்துவ அடிப்படையிலோ அல்லது மத ரீதியாக நாட்டின் பகுதிகள் பிளவுபடுத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு நாடு பிளவடைந்தால் அது பாரியளவிலான அழிவுகளையே ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்த நாட்டு மக்களுக்கு அளித்துள்ள சுதந்திரம் அளப்பரியது எனவும், மக்கள் இந்தத் தருணத்தில் தங்களது நன்றிக்கடனை செவ்வனே செய்வார்கள் எனவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## தேர்தல் சட்ட மீறல்கள் 681 முறைப்பாடுகள் பதிவு




(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறிய 681 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவாகி இருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த முறைப்பாடுகளில் 215 வன்முறைச் சம்பவங்களும் உள்ளடங்குவதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் அரசாங்க சொத்துக்கள் தேர்தல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் 205 முறைப்பாடுகள் பதிவாகியிருக்கின்றன.

இதற்கிடையில் பொலிஸ் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட தேர்தல் முறைப்பாட்டு பிரிவிற்கு இதுவரையில் 228 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் 93 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# யுத்தக் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு




(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்களுடன தொடர்புடையவர்கள் குறித்து விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்படும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க உறுதியளித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைக் குழுவினர் உள்நாட்டு ரீதியில் விசாரணை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.


காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைக் குழுவினால் நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் மூலம் எவரேனும் குற்றவாளியாகக் கருதப்பட்டால் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படாவிட்டால் எவ்வாறு விரிவான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஆணைக் குழு சுயாதீனமானது எனவும் புதிதாக சுயாதீன ஆணைக் குழு ஒன்றை நிறுவ வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

படைவீரர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்றே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் குறிப்பிட்டிருந்தார். எனினும், குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பௌத்தர்கள் பாதுகாக்க வேண்டும்

## பொதுபலசேனா தெரிவிப்பு



(கொழும்பு)

சிங்கள பௌத்தர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்க வேண்டுமென பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான நிர்வாக அலகு வழங்க முடியாது என்ற காரணத்தினால் ஹக்கீம் எதிர்த் தரப்பிற்கு தாவினார்.

'பொதுபலசேனா அமைப்பு ஜனாதிபதிக்கு ஆதரவளித்த காரணத்தினால் முஸ்லிம் காங்கிரஸ், ஆளும் கட்சியை விட்டு விலகவில்லை.

முஸ்லிம்களுக்கு தனி நிர்வாக அலகு வழங்க ஜனாதிபதி இணங்கியிருந்தால் ஹக்கீம் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருப்பார்.

ரவூப் ஹக்கீம், றிசாட் பதியுதின் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தேசத்துரோக கூட்டணியை தோற்கடிக்க வேண்டும். சிங்கள பௌத் தர்கள் இந்தக் கூட்டணியை தோறகடித்து மகிந்தவை பாதுகாத்து அவரை வெற்றியீட்டச் செய்ய வேண்டுமென ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

உங்களது நடவடிக்கைகள் காரணமாகவே முஸ்லிம் காங்கிரஸ் மைத்திரிபாலவிற்கு ஆதரவளிக்க இணங்கினார்கள் என சிலர் குற்றம் சுமத்துகின்றார்களே உண்மையா? என சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது ஞானசார தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.


# தேர்தலில் யாருக்கு வெற்றி? ஒரு பில்லியன் பந்தயம்



தேர்தலில் யார் வெற்றியீட்டுவார்கள் என்பது குறித்து ஒரு பில்லியன் ரூபா பந்தயம் கட்டப்பட்டுள்ளது.

இரண்டு பிரபல வர்த்தகர்கள் இவ்வாறு பந்தயம் கட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இவ்வாறு பந்தயத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவரின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் சார்பில் இவ்வாறு பந்தயம் கட்டப்பட்டுள்ளது.ஒரு வர்த்தகர் மைத்திரிபால சிறிசேனவிற்கும், மற்றுமொரு வர்த்தகர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஆதரவாக பந்தயம் கட்டியுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு வழங்கி வைத்தார் சந்திரகுமார் எம்.பி



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட கண்டாவளை மற்றும் உழவனூர் பிரதேச மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கடந்த 27 ஆம திகதி சனிக்கிழமை அத்தியாவசிய பொருட்களை வழங்கியுள்ளார்.

கடும் மழை காரணமாகவும் நீர்நிரம்பிய இரணை மடுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்தும் கண்டா வளைப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் பாதிப்புக்களை எதிர்கொண்ட சுமார் 188 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து கண்டாவளை மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமாரின் முயற்சியைத் தொடர்ந்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவினால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அந்த மக்களைப் பார்வையிடச் சென்ற அவர் மக்களின் உடனடித்தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பாய், நுளம்பு வலைகள், பெற்சீற் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். இதன்போது அவருடன் கலந்துரையாடிய மக்கள் இரணை மடுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதைத்தொடர்ந்து தமது வீடுகள் மட்டுமன்றி நெற்செய்கைகளும் அழிவுக்குளாகியுள்ளதோடு கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

இவ்விஜயத்தின்போது வடக்கு மாகாணசபைஉறுப்பினர் வை. தவநாதன் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் மனோகரன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கண்டாவளை பிரதேச இணைப்பாளர் செல்வம் மற்றும் கட்சியின் பிரதேச இணைப்பாளர்களும் உடன்சென்றனர்.

# நிர்வாகிகளுக்கான விசேடகூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களின் நிர்வாகிகளுக்கான விசேடகூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டிற்கான கிராம மட்ட இளைஞர் கழகங்களின். புனரமைப்பு நிறைவடைந்துள்ளமையினைத் தொடர்ந்து கழகசெய்ற்பாடுகள் தொடர்பில் அறிமுகத்தினை வழங்குவதனையும் .பிரதேச சம்மேளனத்துடன் கழகங்களை இணைத்துக்கொள்வதனையும் நோக்காக கொண்டு நடைபெறும் இக்கூட்டத்தில் சபை ஆலோசகர்களான,சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் மற்றும் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திருமதி நி.கிருஷ்னேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய நிர்வாகிகளுக்கான செயலமர்வுகள் இம்மாத இறுதியில்நடைபெறவுள்ளதால், வலி. தென்மேற்கில் புதிதாக பதவியேற்றுள்ள இளைஞர் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இளைஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி சுகிர்தா தெரிவித்தார். (48)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு ஆயத்தங்கள் ஆரம்பம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பாடசாலைகளில் இவ் வருடத்திற்கான வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டிகளுக்கான ஆயத்தங்கள் பாடசாலை விடுமுறை காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சென்ற வருடமும் அநேகமான பாடசாலைகள் வருடத்தின் முதலாம் மாதத்திலேயே வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகளை நடாத்தி முடித்திருந்தன.

இதன் மூலம் பாடசாலையில் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளை சீராக முன்னெடுக்க முடிகிறது.மாசி,பங்குனி மாதத்தில் அதிக வெப்பத்தினால் மாணவர்கள் பாதிக்கப்படுவதும் தவிர்க்கப்படுகிறது. மாணவர்களும் பெற்றோர்களும் பெரு விருப்புடன் இதனை வரவேற்பதனையும் காண முடிகிறது (90)

## மந்திகையில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கு

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு அல்வாய் பகுதியில் வைத்து ஒருவர் வாளினால் வெட்டப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் நவரட்ணம் கமலநாதன் என்பவரே வெட்டுக்கு ஆளானவராவார்.

இவரை வெட்டிய நபர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் இவர்களைத் தேடும்பணி நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கலாபூணம் அரச விருது வழங்கும் வைபவத்தில் எழுத்தாளரும் கவிஞருமான தம்பிராசா பரமலிங்கம் நவாலிய,ர்க்கவிராயர் கலாசார அமைச்சர் ஏ.ஏ.ஏக்கநாயக்காவின் துணைவியாரால் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை காணலாம். (68)

# பதிவிறக்கப் பெட்டகம்

"டேய்... ஆத்திரத்திலே அறிவில்லாமல் உன்னைப் பேசிப் போட்டனடா... மன்னிச்சிடுடா"
"விடுடா... ஆத்திரமில்லாத போதும் நீ அறிவோடு பேசுற மாதிரி சொல்லாதே... மனசுக்குச் சங்கடமா இருக்கு"

*** *** *** ***

நண்பன்: "என் பேச்சை"கேட்காமல் என் மனைவி நடக்கமாட்டாள்!"
மற்றவன்: "என்னப்பா இது! நடப்பதற்கு கூட உன் மனைவி உன் பேச்சைக் கேட்க வேண்டுமா?"

*** *** *** ***

"ஆடி வந்தாத்தான் உங்கள் கடையிலே விலை குறைச்சு விப்பீங்களா?"
"இல்லையே... ஆடாமல் வந்தாலும், எங்கள் கடையிலே விலை குறைச்சுதானே விப்போம்?"

*** *** *** ***

"எங்கள் மனேஜர் வரும் போது, மரம் மாதிரி நின்றுகொண்டிருந்தது தப்பாப் போச்சு"
"ஏன்?"
"கூப்பிட்டு அறு, அறு என்று அறுத்துத் தள்ளிவிட்டார்."

*** *** *** ***

"தினமும் நீ குடிக்கிறதுக்கு ஒரு காரணம் சொல்லுவியே... இன்றைக்கு நீ குடிக்க, என்ன காரணம்?"
"ஒரு காரணமும் கிடைக்கவில்லை... அதனால்தான்"

*** *** *** ***

"கிளிக்குப் பேசக் கற்றுத் தந்ததில ஒரு சிக்கல்"
"என்ன சிக்கல்?"
"பதிலுக்குக் கிளி என்னை அது மாதிரி கத்தச் சொல்லுது."

*** *** *** ***

"டே, இப்போதைக்கு மழை நிற்கிற மாதிரி தெரியேல்லையே... என்னடா செய்யிறது?..."
"இப்ப இல்லை எப்பவுமே மழை நிக்காதடா..."
"ஏன் அப்பிடிச் சொல்றாய்?..."
"மழைக்குத்தான் காலில்லையே பின்ன எப்பிடி அது நிற்கும்?"

*** *** *** ***

"அசோகர் சாலை ஒரங்களில் ஏன் மரங்களை நட்டார்?"
"நடுவில் நட்டால் வண்டிகளெல்லாம் மோதிடுமே"

*** *** *** ***

"குமரா, பூனை பாலைக் குடிக்கிறவரை என்ன பண்ணிக் கொண்டு இருந்தாய்?"
"இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று பார்த்துக் கொண்டு இருந்தேன்"

*** *** *** ***

"ஏன் உங்கள் மகன் ரொனிக் சாப்பிட்டுவிட்டு மேலும் கீழும் குதிக்கிறான்?"
"ரொனிக்கை குலுக்கி குடிக்கோணும் என்று டாக்டர் சொன்னதை மறந்திட்டானாம்"

*** *** *** ***

**கண்டக்டர்:** எல்லாரும் டிக்கெட் கேட்டு வாங்குங்க.
**பயணி:** பின்னால் பெரிய மீசை வைச்சவர் ஒருவர் இருக்கிறார்... எனக்கும் சேர்த்து டிக்கெட் எடுப்பார்.
**கண்டக்டர்:** என்னங்க இது அநியாயமா இருக்கு! பின்னால் யாருங்க மீசை வைப்பாங்க. பொய் சொல்லாதீங்க. டிக்கெட் எடுங்க.

*** *** *** ***

"இந்த சிங்களம் – தமிழ் புத்தகம் வாங்கினா முப்பது நாளில சிங்களத்தில் பேசலாம் என்று சொன்னீங்களே... வாங்கி முப்பது நாள் ஆச்சு... கொஞ்சம் கூட பேச வரவில்லை"
"புத்தகத்தை முழுசாப் படிச்சீங்களா?"
"படிக்கிறதா? புத்தகத்தை வாங்குங்க... பேச வரும் என்றுதானே சொன்னீங்க?"

*** *** *** ***

"நுளம்புத்தொல்லை தாங்க முடியேல்ல. இந்த நேரத்தில் ஜோக்கெல்லாம் சொல்லாதடா"
"நுளம்புத் தொந்தரவுக்கும் ஜோக்குக்கும் என்ன சம்பந்தம்?"
"ஒரே நேரத்தில என்னால ரண்டு கடியைத் தாங்கேலாது"

*** *** *** ***

"ஏன் சோகமா இருக்கிறீர்கள்?"
"அந்த ஆள் என்னை அறிவில்லாதவன் என்று திட்டிவிட்டுப் போறான்"
"நீங்கள் அறிவில் ஆதவன் என்று நினையுங்கள்"
"யாரது ஆதவன்"
"அந்த ஆள் சொன்னது சரிதான்"

# கொலை செய்தது யார்?

## தமிழின் துப்பறியும் கதாபாத்திரங்கள் - கிங் விஸ்வா -

1

1894இல் இருந்து தொடங்குவோம். அந்த ஆண்டு தான் தமிழ் நாவல் உலகில் முதல் துப்பறியும் நாவல் எனக் கொள்ளத்தக்க "தானவன் என்னும் பொலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்" என்ற துப்பறியும் புதினம் பண்டித எஸ்.எம். நடேச சாஸ்திரி (1869 - 1906) என்பரால் எழுதப்பட்டது.



தமிழில் துப்பறியும் புதினம் என்ற வகைக்கு இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கோலோச்சிய ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் (திகம்பர சாமியார் பாத்திரம்), ஜே.ஆர். ரங்கராஜு (துப்பறியும் கோவிந்தன்) ஆகியோருக்கு ஒரு உறுதியான அஸ்திவாரமாக அமைந்த இக்கதையில் தானவனுக்கு துணையாக ஒரு பொலீஸ் அதிகாரியும் இருந்தார்.

ஆரம்பத்தில் தமிழில் துப்பறியும் நாயகர்கள் ஆதர்ச புருஷர்களாக, ஒரு மிகைப்படுத்தப்பட்ட பிம்பத்துடன் வராமல், சராசரி மனிதர்களாக படைக்கப்பட்டதற்கு துப்பறியும் சாம்பு ஒரு முக்கிய காரணம். ஆகஸ்ட் 30, 1942 ஆனந்த விகடன் இதழில்தான் தேவனின் துப்பறியும் சாம்பு முதன்முதலில் வாசகர்களை சந்தித்தார். எழுத்தாக மட்டுமே இருந்த சாம்புவுக்கு உருவம் கொடுத்தவர் ராஜு.

வங்கி குமாஸ்தாவாக இருந்து பின்னர் தனியார் துப்பறிவாளராக மாறும் சாம்பு, புறா உட்கார பலாப்பழம் விழுந்ததைப்போல எதேச்சையாக பல விஷயங்களை கண்டுபிடிப் பார் (எவ்வளவு நாளுக்குத்தான் காக்கை உட்கார பனம்பழம் விழுந்ததையே உதாரணமாக சொல்வது?).

தேவன் 1957ஆம் ஆண்டு இறப்பதற்கு முன்பாக மொத்தம் 51 கதைகளை சாம்புவை வைத்து எழுதி இருந்தார். சாம்புவின் மனைவி பெயர் வேம்பு. இவருக்கு உதவும் பொலீஸ்





இன்ஸ்பெக்டர் கோபாலனும், சி.ஐ.டி சந்துருவும் இந்த கதைத்தொடரில் வரும் முக்கிய கதாபாத்திரங்கள். சாம்பு தொலைக்காட்சி தொடராகவும் ரசிகர்களை மகிழ்வித்தார்.

சாம்புவுக்கு பின்னர் ஐம்பதுகளின் மத்தியிலும், அறுபதுகளிலும் சிரஞ்சீவி, மேதாவி, சந்திரமோகன், பி.டி.சாமி போன்றவர்கள் மர்ம நாவல்களையும், பேய்கதைகளையும், கொஞ்சம் (கொஞ்சமா?) சிருங்காரம் சேர்த்து இளைஞர்களை வசியப் படுத்தி வைத்த காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நாயகனையோ • அல்லது துப்பறியும் ஜோடியையோ மையப்படுத்தி கதைகள் எழுதப்படவில்லை.

இந்த நேரத்தில் தான் தமிழக மக்களுக்கு ஹலோ சொல்ல வந்தார் சங்கர்லால். கல்கண்டு இதழின் ஆசிரியர் தமிழ்வாணன் படைத்த ஒரு அற்புத கதாபாத்திரம்தான் இவர். தமிழ் துப்பறியும் நாவல்களின் இரும்புக்கை மாயாவி இவர்தான். இவரால் கவரப்பட்டவர்கள் பலர்.

தமிழ்வாணன் சங்கர்லாலை மைய மாக வைத்து மொத்தம் 23 நாவல் தளை தொடர்ச்சியாக எழுதினர். ஹலோ சங்கர்லால், சங்கர்லால் வந்துவிட்டார், இருண்ட இரவுகள், சங்கர்லால் துப்பறிகிறார், பாரிசில் சங்கர்லால், செய்யாத குற்றம், செய்தவர் யாரோ?, இன்னொரு செருப்பு எங்கே? என்று ஒரு தனி ராஜாங்கமே நடத்தினார் சங்கர்லால்.

சங்கர்லாலுக்கு கதையில் ஜோடி என்று யாரும் கிடையாது. தனி நபர் சாம்ராஜ்யம்தான். இவரது மனைவி யான இந்திரா பல கதைகளில் வந்துள்ளார். சில நேரங்களில் கதையில் சில சூட்சுமத்தை எப்படி கண்டறிந்தார் என்பதை வாசகர்க ளுக்கு விளக்க, இந்திரா ஒரு கருவி யாக உபயோகப்படுத்தப்பட்டார்.

தேநீர் பிரியரான சங்கர்லால் எப்போதும் தேநீர் அருந்திக் கொண்டே தான் இருப்பார். இவரது தேநீர் தேவையை பூர்த்தி செய்பவர் மாது என்ற ஊழியர். இவரைத்தவிர கத்தரிக்காய், மாணிக்கம், அவரது மனைவி கல்பனா, மைனா ஆகியோர் சங்கர்லாலின் கதைவரிசையில் தொடர்ந்து வரும் கதாபாத்திரங்கள். சங்கர்லால் தன்னுடைய காலை மேசைமேல் குறுக்காக வைத்துக்கொண்டு தேநீர் அருந்தும் பாணியை ஒரு ஸ்டைலாக பாவித்த வாசகர்கள் எழுபதுகளில் பலருண்டு.

அசகாய சூரரான சங்கர்லாலை மறக்கடித்தவர் இன்னொரு துப்பறியும் கதாநாயகன். அவர் வேறு யாருமில்லை, சாட்சாத் தமிழ்வாணன் அவர்கள் தான்.

தமிழ்வாணன் ஒரு சுபயோக சுபதினத்தில் சங்கர்லாலுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு தானே துப்பறிய ஆரம்பித்துவிட்டார். தமிழ்வாணனின் ரசிகர்கள் 1976 ஆம் ஆண்டு தீபாவளி இரட்டிப்பு போனஸ் கிடைத்ததைப் போல கொண்டாடினார்கள்.

அப்போதுதான் கல்கண்டின் அட்டையில் தமிழ்வாணனே துப்பறி கிறார் என்ற வாக்கியத்துடன் ஒரு தொடர் தமிழ்வாணனையே நாய கனாக கொண்டு ஆரம்பித்தது. ஆனால் அடுத்த வருடமே தன்னுடைய 56ஆவது வயதில் தமிழ்வாணன் இயற்கை எய்த, அவருடைய தொடர், சிற்சில கதைகளுடனே முடிவடைந்தது.

இதற்கு பிறகு 1986 -87இல் லேனா தமிழ்வாணன் மறுபடியும் சங்கர்லாலை நாயகனாக கொண்டு தொடர்கதையை எழுத ஆரம்பித்தார். ஆனால் அப்போது தமிழில் க்ரைம் நாவல் மோகம் உச்சத்தில் இருக்க, தூய தமிழ் பேசி, தேநீர் குடிக்கும் சங்கர்லால் பழசாகத் தெரிந்தார். ஆனால் இன்றளவிலும் மணிமேகலை பிரசுரத்தின் அதிக விற்பனையாகும் புத்தகப்பட்டியலில் முதலிடம் சங்கர்லாலுக்கே.

இதற்கிடையில் வேறு ஒரு துப்பறியும் ஜோடியும் தமிழுக்கு இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. அது பெர்ரி மேசனும் உஷாதேவியும். என்னடா இது ஒருவர் ஆங்கிலேய ராகவும் (பெர்ரி மேஸன்) மற்றொருவர் நம்ம நாட்டவராகவும் (உஷாதேவி) இருக்கிறார்களே என்றுதானே சிந்தனை?

இதுதான் தமிழாக்கத்தின் சாதனை. பெர்ரி மேனின் காரிய தரிசிதான் தமிழில் உஷாதேவியாக் கப்பட்டார்.

(தொடரும்)

# புலிகள் இப்போது இல்லை என்பதை த.தே.கூ. ஒத்துக்கொள்ள வேண்டும்



- வீ.ஆனந்தசங்கரி -

எதிரணி வேட்பாளரை ஆதரிப்பதாக அறிவித்தமையானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்ததற்கு மாறான விளைவையே ஏற்படுத்தும். ஏனெனில் பல ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள், தமிழர்கள், சிங்களவர்கள் சொல்லமுடி யாத துன்பங்களை அனுபவித்ததோடு பல உறவுகளையும் இழந்துள்ளனர். சில குடும்பத்தினர் கண்ணீருடனும் போதிய உணவின்றியும் வாழ்கின்றனர். எனது குடும்ப வட்டத்தில் தன் இரு குழந்தைகள், கணவர் ஆகியோரை எண்ணி தினமும் கண்ணீரும் கம்பலையு மாக போதிய உணவின்றி வாழ்கின்றனர்.

விடுதலைப் புலிகளை தமிழ்த் தேசியத்தின் தலைமையாகவும், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகவும் ஏற்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அநேகர் எதுவித இழப்புக்களை கொண்டிராதவர்களும் சிலர் நிதியுதவி உட்பட விசேட சலுகைகளை பெற்றவர் களாகவும் உள்ளனர். ஆனால் ஏனைய பாதிப்புக்குள்ளானவர்கள் பல்வேறு துன்பங்களுடன் வாழ்கின்றனர். இக்குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்கள் இவ்வாறான நிகழ்வில் மனநிறைவோடு கலந்துகொள்ள மாட்டார்கள்.

ஆகவேதான் நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேரத்துடனேயே கவன மாகவும் இவர்களை விழிப்படைய செய்யாமலும் அவர்களையே தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பை அவர்களிடமே விட்டுவிடும்படி கோரியிருந்தேன். சிலருக்கு எனது கோரிக்கை வேடிக்கையாக இருந்தாலும் பலர் அதிலுள்ள நியாயங்களை புரிந்து கொள்வர். இதை விழிப்படைய செய்தால் விளைவுகள் பாரதூரமாக அமையும்.

பாதிப்படைந்தவர்களை சாந்தப்படுத்து வதற்கு த.தே.கூ க்கு உள்ள ஒரேவழி தமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தற்போது ஒரு தொடர்பும் இல்லை யென்றும், விடுதலைப் புலிகள் முற்றாக இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டார்கள் என்றும் பிரகடனப்படுத்துவதே.

எனது உறுதியான கருத்து என்னவெனில் திருவாளர்கள் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரால் மட்டும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாதென்பதும் கூட்டமைப்பில் இணைந்துள்ள ஏனைய கட்சித் தலைவர்களும் கலந்து முடிவுகளை மேற்கொள்வதே சிறந்ததாகும்.

துபாய் அரசு, கடந்தாண்டு ஒரு வித்தியாசமான போட்டியை அறிமுகப்படுத்தி, குறிப்பிட்ட காலத்திற்குள், ஒரு கிலோ எடை குறைப்போருக்கு, தங்கம் பரிசாக வழங்கப்படும் என, அறிவித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக இந்தாண்டும் இதேபோன்ற போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இம்முறை போட்டியில் பெற்றோர், தங்கள் குழந்தைகளுடனே பங்கேற்க வேண்டும் என்றும், போட்டியில் சேருவதற்கு பெயர் கொடுத்த சில மாதத்துக்குப் பின், போட்டி நடத்தப்படும். அதில், போட்டியில் சேரும்போது இருந்த எடையில், எத்தனை கிலோ குறைந்துள்ளனரோ, குறைந்த ஒவ்வொரு கிலோவுக்கும், தலா, இரண்டு கிராம் தங்கம் பரிசாக அளிக்கப்படும் என, அறிவித்துள்ளது. பெயரை பதிவு செய்வதற்கு கூட்டம் அலைமோதுகிறது.



## எடை குறைத்தால் தங்கம் பரிசு!

## தமிழரசுக் கட்சியிடம் இருந்து விலகும் மக்கள்

அபிராமி, மஞ்சு வாரியர், கனிகா என திரு மணம் ஆன நடிகைகள் மீண்டும் நடிப்புக்குத் திரும்பி உள்ளனர். இவர்களைத் தொடர்ந்து

கலவரத்தில் முடியும் அபாயத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக சொல்கின்றனர்.

இறப்பதற்கு முன்பாக மொத்தம் ... இரும்புக்கை மாயாவி இவர்தான். இவரால் க்வரப்பட்டவர்கள் பலர். ... ஆகியோர் சங்கர்லாலின் கதைவரிசையில்

(தொடரும்)

## எடை குறைத்தால் தங்கம் பரிசு!

# தமிழரசுக் கட்சியிடம் இருந்து விலகும் மக்கள்

**- அ.நிக்ஸன் கட்டுரையிலிருந்து.**



தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர். கூட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னர் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆரம்பகாலங்களில் வாக்களித்தனர். எந்த ஒரு தேர்தலிலும் தமிழ் மக்கள் கொழும்பை மையமாகக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சிக்கோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ வாக்களித்ததில்லை. ஏன் இடதுசாரிக் கட்சிகளுக்குக் கூட வாக்களிப்பதில்லை. இதன் அர்த்தம் என்ன? தமது அரசியல் அபிலாசைகளுக்குரிய சரியான அதிகாரங்களை தமிழ்த் தலைவர்கள் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில்தான் தமிழ் மக்கள் அவ்வாறு வாக்களித்தனர் என்ற முடிவுக்கு வரலாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தலைவர்கள், உறுப்பினர்கள் கொழும்பை மையமாகக் கொண்ட அரசியல் கட்சிகள் போன்று செயற்படமாட்டார்கள் என்றும் - சுதந்திர வேட்கைதான் ஒரே இலக்கு என்றும் - மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால், அந்த நம்பிக்கை மேலும் நீண்டகாலத்திற்கு நீடிக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக தெரியவில்லை. அதற்கு நான்கு காரணங்களைக் கூறலாம்.

ஒன்று - கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வைத்திருந்த அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான காலகட்டத்தில் தமிழ்த்தலைவர்கள் செயற்படவில்லை.

இரண்டாவது - போரில் ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணங்களை எதிர்பார்க்காது தேர்தல்களில் இவர்களுக்கு வாக்களித்தும், உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியல் வேலைத் திட்டங்கள் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்ற மனக்குமுறல்கள்.

மூன்றாவது - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு 2009ஆம் ஆண்டின் பின்னரான காலகட்டத்தில் புலம்பெயர் நாடுகளில் இருந்து கிடைத்த உதவிகளுக்கான கணக்கு விபரங்கள் சரியான முறையில் காண்பிக்கப்படாமையும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு குறைந்தபட்ச உதவிகள் செய்யப்படாமையும்.

நான்காவது - எதிர்கால அரசியல் வேலைத் திட்டங்கள் இல்லாமை.

இந்த நான்கு காரணங்களும் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன எனக் கூறலாம்.

# ஒளிரும் பூச்சி இனம்

பூச்சி இனங்கள் பல தாமாகவே ஒளிரும் தன்மை கொண்டவை. அதில் மின்மினிப் பூச்சியும் ஒன்றாகும்.

மின்மினிப் பூச்சிகளைப் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருப்போம். நிறையப் பேர் பார்த்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

அது எப்படி இந்த பூச்சி மட்டும் பிரகாசமாக ஒளிர்கிறது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது உண்டு.


மின்மினிப் பூச்சிகளை ஆங்கிலத்தில் Firefly என்று அழைக்கிறார்கள். Coleopteran என்ற குடும்பத்தைச் சேர்ந்தது.

இப்பூச்சி ஒளிர்வதற்கு காரணம் லூசி.பெரின் (luciferin) என்ற இரசாயன கூட்டுப் பொருள் ஆகும். இது பூச்சியின் ஒளியுமிழ் உறுப்பில் (light emitting organ) நிறைந்துள்ளது.

இந்த லூசி.பெரின், லூசி.பெரெஸ் என்ற என்சைமில் உள்ள ஒட்சிசன் மற்றும் கலங்களில் உள்ள ATP மற்றும் மக்னீசியம் ஆகியவற்றுடன் சேரும்போது ஒளி உண்டாகிறது.

இவற்றில் ஏதேனும் ஒன்று இல்லாவிடினும் ஒளியுண்டாகாது. மின்மினிப் பூச்சி விட்டுவிட்டு ஒளிர்வதற்குக் காரணம், அதன் ஒளியுமிழ் உறுப்புக்குச் (light emitting organ) செல்லும் நரம்புத் தூண்டல்கள் (nerve impulses) விட்டு விட்டுச் செல்வதேயாகும்.

(நன்றி: Jaffna Diabetic Centre.org)




# சினிமா சினிமா

❖ மூன்று பிரபல நடிகைகளை கோடம்பாக்கத்துக்கு அளித்த, நட்சத்திரத் தாய் விஜயலட்சுமி, தான் சந்தித்த துயரங்களைப் பற்றி கூறுகிறார்: "32ஆவது வயதில் கணவரை இழந்து, ஐந்து குழந்தைகளுடன் வாழ்க்கையில் போராடினேன். மகள்கள், நடிகைகள் ஆன போது தான், வாழ்க்கை மீது கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், இரண்டு ஆண் பிள்ளைகளை இழந்த போது ஆடிப் போனேன். ஒருவன், 17 வயதில் தற்கொலை செய்து கொண்டான். மற்றவன், சாலை விபத்தில் மரணமடைந்தான்..." இப்படிச் சொல்பவர் நடிகைகள் கலாரஞ்சனி, கல்பனா மற்றும் ஊர்வசியின் தாயார். மகள்கள் மூவரும் விவகாரத்து பெற்ற போது, விஜயலட்சுமி மீண்டும் துயரமடைந்தார். இவர்களில், ஊர்வசி வேறு ஒருவரை மறுமணம் செய்து, ஒரு குழந்தைக்கும் தாயாகி விட்டது, கொஞ்சம் மனநிறைவை தருவதாக கூறுகிறார் இவர்.

❖ 2008இல் ஸ்லம்டோக் மில்லியனர் படத்துக்காக, இரண்டு ஒஸ்கார் விருதுகளை பெற்றார் ஏ.ஆர்.ரஹ்மான். அதையடுத்து, 2010இல் அவர் இசையமைத்த, 127 Hours படத்துக்காக ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது; ஆனால், விருது கிடைக்கவில்லை. தற்போது ஏ.ஆர். ரஹ்மான் இசையில் வெளியாகியுள்ள, கோச்சடையான் மற்றும் மில்லியன் டொலர் ஆர்ம் ஆகிய படங்கள் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன.

❖ 2014இல் எந்த நடிகர், நடிகைகளை இணையத்தில் ரசிகர்கள் அதிகமாகத் தேடி இருக்கிறார்கள் என்பதை வரிசைப்படுத்தி இருக்கிறது கூகுள். தென்னிந்திய சினிமாவில் நடிகர் விஜய் முதலிடம் பிடித்திருக்கிறார். இவரைத் தொடர்ந்து நடிகைகளில் காஜல் அகர்வால் முதலிடம் பிடித்துள்ளார். தமன்னா, அஜித், சமந்தா, மகேஷ்பாபு ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர்.

❖ பொங்கலுக்கு அஜித்தின் "என்னை அறிந்தால்", விஷாலின் "ஆம்பள", சிவகார்த்திக்கேயன் நடிக்கும் "காக்கிச் சட்டை" படங்களை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. திடீரென்று ஷங்கரின் "ஐ" பொங்கலுக்கு முன்பாகவே ஜனவரி 9 ஆம் திகதி வெளியாகிறது என்ற செய்தியால் சற்று சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

❖ "பூவே உனக்காக" சங்கீதா, ஒளிப்பதிவாளர் சரவணனைத் திருமணம் செய்து கொண்டு சினிமாவிலிருந்து விலகினார். கடைசியாக "மேரி ஆல்பட்" என்ற படத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டில் நடித்தார். அதன் பின் முழுக் கவனத்தையும் குடும்பத்தின் பக்கம் திருப்பியிருந்தார். சமீப காலமாக ஜோதிகா, அபிராமி, மஞ்சு வாரியர், கனிகா என திருமணம் ஆன நடிகைகள் மீண்டும் நடிப்புக்குத் திரும்பி உள்ளனர். இவர்களைத் தொடர்ந்து சங்கீதாவுக்கும் மீண்டும் நடிக்கும் ஆசை ஏற்பட்டுள்ளது. தற்போது மலையாள சினிமா அவருக்கு கைகொடுத்திருக்கிறது. "நகரவருதி நடுவில் நிஜன்" என்ற படத்தில் நடிகர் சீனிவாசன் ஜோடியாக சங்கீதா நடிக்கிறார்.

❖ நண்பேன்டா படத்தைத் தொடர்ந்து, "கெத்து" மற்றும் "இதயம் முரளி" ஆகிய படங்களில் நடிக்கிறார் உதயநிதி. இந்தப் படங்களில் நடிக்க நயன்தாரா மற்றும் ஹன்சிகாவுக்கு இணையான வேறு சில முன்னணி நடிகைகள் கிடைப்பார்களா..." என்று சிலருக்கு தூது விட்டார். ஆனால், அவர்கள், உதயநிதிக்கு கால்ஷீட் தரவில்லை. "மாஸ்" படத்தில் நடிக்க லண்டனில் இருந்து சென்னை வந்திருந்த, ஐ பட நாயகி எமி ஜாக்சனின், தூதுக்கு விஷயம் போக, உடனே, உதயநிதியைச் சந்தித்து, கெத்து படத்தில் நடிக்க ஒப்புதல் தெரிவித்து விட்டார். இதனால், இன்ப அதிர்ச்சியடைந்த உதயநிதி, விக்ரமின், ஐ படத்தில் நடித்திருப்பவர், தன்னுடன் நடிக்கிறார் என்றதும், இதற்கு முன் தன்னுடன் நடித்த நடிகைகளுக்கு கொடுத்ததை விட, சில கோடிகளை அதிகமாகக் கொடுக்க முன்வந்திருக்கிறார்.

❖ தமன்னாவிடம் "திருமண வயதாகி விட்டதே எப்போது திருமணம்?" என்று கேட்டால் அதற்கு, "நயன்தாரா மற்றும் அனுஷ்கா போன்ற நடிகைகளுக்கெல்லாம், 30 வயதுக்குப் பின் தானே, வெயிட்டான கதைகள் கிடைத்து வருகின்றன. அதனால், நானும், 30 வயதை எதிர் நோக்கியிருக்கிறேன். அதனால், திருமணம் பற்றி இன்னும், நினைத்துக்கூட பார்க்கவில்லை..." என்று சொல்லி, அவர்களின் வாயடைக்கிறார்.

❖ இயக்குனர் ஏ.எல்.விஜயை திருமணம் செய்து கொண்ட அமலா பால், இப்போதும் மலையாளப் படங்களில் நடித்து வருகிறார். இப்போது மோகன்லாலுடன், மிலி என்ற படத்தில், முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார். அவர் நடிப்பதை விஜய் அனுமதித்துள்ளபோதும், அவரது பெற்றோர் இரவு தாமதமாக வரும் அமலாவை நிற்க வைத்து கேள்வி மேல் கேள்வி கேட்கின்றனர். இதனால், அடிக்கடி கோபித்துக்கொண்டு, கேரளாவுக்கு பறந்து விடுகிறார். ஆக, காதல் திருமணம்







கலவரத்தில் முடியும் அபாயத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக சொல்கின்றனர்.


❖ முதன்முறையாக தனுஷுடன் இணைந்துள்ள காஜல் அகர்வால், அடுத்தபடியாக ஆர்யா மற்றும் விஷாலுடன் ஜோடி சேருவதற்கு கதை கேட்டிருக்கிறார்.

❖ குறைவான சம்பளம் வாங்கி வந்த விமலும், தற்போது தன் சம்பளத்தை ஒன்றரை கோடியாக உயர்த்தி, தயாரிப்பாளர்களுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

❖ "சின்ன வீடா வரட்டுமா..." பாடலுக்கு, அர்ஜுனுடன் நடனமாடிய தேஜாஸ்ரீ, மராத்திய மொழிப் படங்களில் பிசியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

❖ 'வை ராஜா வை' படத்தில் தனுஷ் சொன்னதற்காக கௌரவ வேடத்தில் நடித்த ஆடுகளம் டாப்சி, அடுத்து தனுஷுடன் ஒரு படத்தில் இணைந்து நடிக்கவிருக்கிறார்.

❖ பிரபல பேச்சாளரும், எழுத்தாளருமான இளசை சுந்தரம், கே.பாக்யராஜ் இயக்கி, வெளிவர இருக்கும், துணை முதல்வர் படத்தில் கதாநாயகனின் தந்தையாக நடிக்கிறார்.




❖ 'தமிழுக்கு எண் 1ஐ அழுத்தவும்' என்ற படத்தில், இளம் வயது விஞ்ஞானியாக நடித்துள்ளார் நகுல்.

❖ திருட்டுப் பயலே பட கதாநாயகன் ஜீவன், சில ஆண்டு இடைவெளிக்குப்பின், தற்போது, ஜெயிக்கிற குதிரை என்ற படத்தில் நடித்து வருகிறார்.

# துன்பியல் நிகழ்வுகளைக் கடந்து எதிர்காலத்திற்காக முன்னோக்கி வாருங்கள்

## மன்னாரில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)



இந்த நாட்டில் கடந்த இருள் சூழ்ந்த காலம் முடிந்து விட்டது. நாங்கள் இனி முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாங்கள் பட்ட கஷ்டம் போதும், முகாமில் இருந்த கஷ்டம் போதும். உங்களுக்கென்று வீடுகள் இருக்க வேண்டும்.

அந்த நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு இந்த நாட்டில் வாழ்கின்ற எல்லா இன மக்களும் கை கோர்த்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்திருந்த பிரசாரக் கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை மாலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்கள் மத்தியில் மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தைச் சேர்ந்த எந்த அமைச்சராக இருந்தாலும் அவர் இந்துக்கள், கத்தோலிக்கர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் என பார்க்காது எல்லோரையும் ஒருமித்து பார்க்க வேண்டும். அது தான் அவரது கடமை. இனவாதத்தை தூண்டி விட்டு, மதவாதத்தை தூண்டி விட்டு சேவை செய்ய முடியாது.

எங்களுக்குத் தெரியும் மதப் பிரச்சினை காரணமாக கஷ்டப்பட்ட நாடுகள் தொடர்பில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உட்பட பல நாடுகள் மதத்தின் காரணமாக கஷ்டப்படுகின்றன.

எங்களுக்கு தெரியும் கடந்த 5 வருடங்களுக்கு முன் இந்தப் பகுதி எப்படி இருந்தார்கள் என்றும், தற்போது எப்படி இருக்கின்றது என்றும் எங்களுக்கு தெரியும். தற்போது இந்தப் பகுதியில் மக்கள் எந்த பிரச்சினைகளும் இன்றி சந்தோசமாக சந்தேகம் இன்றி வாழக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் முக்கியமானதொன்றை கூற விரும்புகின்றேன். முக்கியமாக முஸ்லிம் மக்களை பார்த்துக் கேட்கின்றேன். உங்களுடைய பெறுமதியான வாக்குகளையும் எந்தவொரு முதலாளிக்கும் ஏலத்தில் விடுவதற்கு நீங்கள் இடமளிக்க வேண்டாம் என்று உங்களைப் பார்த்து கேட்டுக் கொள்கின்றேன்.

மீனவ மக்களுக்கும், விவசாய மக்களுக்கும் சில சில பிரச்சினைகள் இருக்கலாம். அவற்றை நாங்கள் வெகு விரைவில் தீர்த்து வைப்போம்.

எந்த இனத்தையும் இன்னொரு இனம் அடிமையாக்க முடியாது. இது எமது தாய் நாடு. நாம் எல்லோரும் ஒரு தாய் மக்கள். அந்த வகையிலே நாம் எல்லோரும் வாழ வேண்டும் என்பதனைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்க் கட்சியினை சார்ந்தவர்கள் இலவசக் கல்வியை இல்லாது செய்ய முயற்சிக்கின்றனர். பல்கலைக்கழகத்தில் படிபபதற்கு அங்கு பணம் அறவிட்டு கல்வியை போதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழகங்களில், தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிக்க வேண்டும் என்றால் அதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்ற நிலமை அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளனர். அதற்கு நாங்கள் ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டோம். இலவசக் கல்வியை நாங்கள் தொடர்ந்தும் காப்பாற்றுவோம். அதனால் நீங்கள் எல்லோரும் எங்களுடன் கை கோர்த்துக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார்.

# மைத்திரி ஆட்சிக்கு வந்தால் சந்திரிகா பிரதமராக முயற்சி

## உதயகம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்தால் சந்திரிகா குமாரதுங்க பிரதமர் பதவியை பெறுவதற்கும் முயற்சிகள் இடம்பெறுவதாக மேல் மாகாண முன்னாள் அமைச்சர் மற்றும் தூய ஜாதிக ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிப் பதவியை வகிக்கவே முயற்சிக்கின்றார்.

மேலும் ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படுமா? இல்லையா என்பதற்கும் மைத்திரிபால பதிலளிக்கவேண்டும். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரபாகரனை மிஸ்டர் பிரபாகரன் என்று கூறியுள்ளார்.

இதன்மூலம் உலகின் மிலேச்ச பயங்கரவாத தலைவனை கௌரவித்துள்ளார். பிரபாகரன் தனது இனத்தையே அழித்தவர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்தால் சந்திரிகா குமாரதுங்க பிரதமர் பதவியை பெறுவதற்கும் முயற்சிகள் இடம்பெறுவதாக தெரிகின்றது. இந்த நாட்டை சமஷ்டி முறைக்கு கொண்டு செல்ல முயற்சித்தவர் சந்திரிகாதான்.

2000 ஆம் ஆண்டு தீர்வுப் பொதி மூலம் அதனை கொண்டுவர முயற்சித்தார்.

ஆனால் அதிஷ்டவசமாக அது நிறைவேறவில்லை. தற்போது ஈழக் கனவை நனவாக்க சந்திரிகா முயற்சிக்கின்றார் என தெரிவித்தார்.

# வெள்ள அனர்த்தத்தால் வடக்கில் 38,416 பேர் முகாம்களில் தஞ்சம்

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள் ளம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் 38 ஆயிரத்து 416 பேர் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 8 ஆயிரத்து 194 பேர் 57 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் மதியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாயிரத்து 232 பேரும், வவுனியா மாவட்டத்தில் இரண்டாயிரத்து 985 பேரும், மன்னார் மாவட்டத்தில் இரண்டாயிரத்து 977 பேரும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக வட மாகாணத்திலுள்ள 484 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ள அதே வேளையில், மூவாயிரத்து 707 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

# முழு நிலாநாள் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

2015 க.பொ.த. (உ/த)கலை, தொழில் நுட்பவியல் மாணவர்களுக்கான முழுநிலா நாள் கருத்தமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களது வேண்டுகோளுக்கிணங்க இரு இடங்களில் நடைபெறுகின்றது.

மீசாலை ஊயர்கலைக்கல்லூரியில் வரலாறு பாடமும், கிளிநொச்சி அன்னை இல்லம் வைத்தியசாலைக்கு அருகாமையில் லிபரா இல்லத்தில் தொழில் நுட்பவியலுக்கான புவியியல் பாடமும் நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி முல்லை மாவட்ட மாணவர்கள் இலவசமாக பங்குபற்றி பயன் பெறலாமென ஏற்பாட்டாளர்களான மீசாலை உயர்கலைக்கல்லாரியினர் அறிவித்துள்ளனர்.

(11)

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# வடக்கு ஆளுநர் - முதலமைச்சர் இணைந்த திட்டம் அவசரம் தேவை

## கல்லுண்டாய் கழிவு குதம் பசுமையாக மாற்றப்பட வேண்டும்


திண்ம கழிவு உபாயம் தொடர்பில் இன்று நவீன தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு நவீன உபாயத்தின் கீழ் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு வரு கின்றன.

இவற்றில் ஒரு பகுதி பசளைகளாகவும் ஏனையவை மீள் சுழற்சி (3R) பொருட்களாகவும் பயன்படுகின்றன.

வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகளில் இத்தொழில்நுட்பம் மிக வளர்ச்சி கண்டுள்ளன.

எந்தவொரு கழிவுப் பொருட்களும் சமூகத்திற்கு கேடாகாமல் அவை மீள் சூழற்சி பொருட்களாக மாறுகின்றன. வருமானமும் தருகின்றன.

இதேபோல் இந்திய அரசின் பிரதமர் மோடி இந்தியாவை தூய்மைப்படுத்த தூய்மை இந்திய திட்டத்தை நடைமுறைப்படுத்தி அழகான ஒரு தேசமாக இந்தியாவை மாற்ற முற்படுகின்றார்.



இவ்வாறாக கழிவுகள் அற்ற பிரதேசமாக மாறுவதற்கு சகல நாடுகளும் பொருத்தமான திட்டங்களை முன்வைத்து வருகின்றன. இந்நிலையில் யாழ். மாவட்டம் வடக்கில் பிரதான ஒரு மாவட்டமாக சர்வதேசத்தின் பார்வையில் உள்ள பிரதேசம்.

இப்பிரதேசத்தில் யாழ்.மாநகரசபை, 3 நகரசபை, 13 பிரதேச சபை என 17 உள்ளூராட்சி சபைகளை கொண்டமைந்த அழகான பிரதேசம்.

இப் பிரதேச சபைகளில் இறுதி கழிவகற்றும் திட்டம் என்பது ஒரு பிரதேசத்தில் கழிவுகளை கொண்டு சென்று கொட்டி விட்டு எரிப்பதும் இதனால் சூழல் மாசு அடைவதும், மனிதர்களுக்கு ஆபத்தான மரணங்களை ஏற்படுத்தும் நிகழ்வுகள் எவ்வித தொழில்நுட்பங்களுமின்றி அரங்கேறி வருகின்றது.

இன்று குறிப்பாக நாம் கூறவருவது வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் - காக்கைதீவு திண்மகழிவு குதத்தைப்பற்றியது.

இன்று சுன்னாகத்தில் சிறிது சிறிதாக நிலத்தடி நீரை பாதித்த கழிவு ஒயில் சுன்னாகம் முழுவதையும் அழிக்கும் அளவுக்கு மாறிவிட்டது.

இதேபோன்று காக்கைதீவு - கல்லுண்டாயில் பொருத்தமற்ற தொழில்நுட்ப தொழில்நுணுக்க முறைகள் எதுவுமற்ற நிலையில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களினால் கொட்டப்படும் கழிவுகள், ஆனைக்கோட்டை மற்றும் இதர அராலி பிரதேச மக்களை விரைவில் அழிக்கவுள்ளது.

குறிப்பாக கல்லுண்டாயில் கொட்டப்படும் கழிவுகள் அங்கு தீ வைக்கப்படுகின்றன.

இதனால் வரும் ஆபத்தான புகை மூட்டம் நவாலி - ஆனைக்கோட்டை பிரதேசத்தை முற்றாக ஆக்கிரமிக்கின்றன.

இப் புகைமூட்டத்தினால் நவாலி - ஆனைக்கோட்டை பகுதிகளில் உள்ள மக்களுக்கு புற்றுநோய் (CANCER), சுவாசநோய், அஸ்மா மற்றும் இதரநோய்களால் உயிராபத்துக்கள் இடம்பெறவுள்ளன.

மேலும் உள்ளூராட்சி சபைகள் மலக்கழிவு, ஆஸ்பத்திரி கழிவு, கால்நடை கழிவு, கோழி கழிவு என்பனவும் தொடர்ச்சியாக ஆக்கிரமித்த வண்ணம் உள்ளன.

இதனால் பல நோய்க்காவிகள் கல்லுண்டாயில் இருந்து பரவி வலி.தென்மேற்கில் உள்ள மக்களை அழிக்கவுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் எவ்வாறு குளத்தில் இருந்து "எபோலா" (EPOLA) நோய்பரவி இன்று 7 ஆயிரம் பேரை காவுகொண்டு விட்டது.

இதேபோன்று கல்லுண்டாயில் இருந்து ஆபத்தான நோய்கள் பரவி மக்களை அழிவில் இருந்து காப்பாற்றவேண்டியது அரசின் தலையாய கடமையாகும். இன்று நவாலி - ஆனைக்கோட்டையில் நுளம்பு தாக்கம் அதிகரித்து விட்டது.

இதற்கு முழுக்காரணம் கல்லுண்டாயில் இருந்து வரும் கழிவுப் பொருட்களின் ஊடான உற்பத்தி பெருக்கமே என சுகாதார பகுதியும் எச்சரித்துள்ளது. இன்று பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், அரசு என உயர் மட்டங்களில் ஆராயப்படுகின்றது.

எது எவ்வாறு எப்படியிருப்பினும் முதல் மானிப்பாய், யாழ். நல்லூர் மற்றும் இதர பிரதேச உள்ளூராட்சி மன்றங்கள் பொறுப்புடன் குப்பைகள், ஆபத்தான திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதனை நிறுத்தவேண்டும்.


இதுவரை காலமும் கொட்டிய அனைத்து கழிவுகளையும் நவீன இயந்திர சாதனங்கள் மூலம் அகற்றி அங்கு பசுமைதரும் மரங்களை நாட்டி புனிதம் பேணப்பட்டு "சுற்றுலா மையமாக" (Tourigh) மாற்ற வேண்டும். இத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் மக்கள் அழிவில் இருந்து காப்பாற்றப்படுவதுடன் நிலத்தடி நீர்வளம் விவசாயவளம், கடல் வளம், மனித வளம் என்பன முதலில் காப்பாற்றப்படும்.


இச் செயற்றிட்டத்தை வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ,வடக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கண்விழித்தால் மட்டுமே மாற்றங்கள் உருவாகி வளமான தேசம் உருவாகும்.

பொருத்தமான அனைவரும் ஒன்று கூடி பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.


நன்றி.

- இரா. ரிஷாக -

08)  0.7 பங்கை நிழற்றி காட்டுக


09) 
இவ்வுருவில் 1cm சமதூர இடைவெளியில் ஆணி அறையப்பட்டு இறப்பர் நாடாவினால் இணைக்கப்பட்ட உரு காட்டப்பட்டுள்ளது. உருவின் பரப்பளவு யாது?

..........................................................

10) 

A.B.C என்னும் உலோகத்துண்டங்களினதும் நீளம், அகலம் முறையே சம அளவு கொண்டது எனின் உருவின் சுற்றளவு யாது?

..........................................................

11) பின்வரும் சாதாரண நேரத்தை நியம நேரத்தில் தருக. பி.ப 8.05 

12) 60 சென்ரமீற்றர் சுற்றளவுள்ள இரும்பு வளையம் ஒன்றை தரையில் உருட்டி விட்ட போது 3மீற்றர் தூரம் சென்று விழுந்தது. அவ்வாறெனின் வளையம் சுழன்று சென்ற தடவைகள் எத்தனை?

..........................................................

13) முரளி 180 நிலக்கடலைப்பைக்கற்றுக்களை வைத்திருந்தான். ஒருவருக்கு 7 பைக்கற்றுக்கள் வீதம் அவற்றைத் தனது 30 நண்பர்களிடையே பங்கிட்டுக் கொடுக்க விரும்பினான். அவ்வாறு பங்கிட அவனுக்கு இன்னும் தேவைப்படும் நிலக்கடலைப் பைக்கற்றுக்கள் எத்தனை? ..........................

14) கம்பி ஒன்றை வளைத்து 2m நீளமும், 1m அகலமும் உள்ள ஒரு செவ்வகம் செய்யப்பட்டது. இக் கம்பியைக் கொண்டு மூன்று பக்கங்களும் சம அளவுள்ள ஒரு முக்கோணம் செய்யப்பட்டால் முக்கோணியின் ஒரு பக்க நீளம் யாது?

..........................................................

(13) விலைப்பட்டியலை பூர்த்தி செய்க

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| 1kg சீனி - 130.00 | 1500g | 1.......................... |
| 500g தேயிலை - 110.00 | 1.1/2kg | 2.......................... |
| 250g பருப்பு - 70.00 | 750g | 3.......................... |
| 750g சக்கரை - 100.00 | 500g | 4.......................... |

(14) சூழல் சுத்தம் பேணுவோம என்னும் தலைப்புக்குப் பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்கள் இடம்பெற வேண்டும். (இலக்கணத் தொடர்பு சரியாக அமைய வேண்டும்)

01 ..........................................................

02..........................................................

03..........................................................

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(1).II (2).II (5).III (6).I (7).I (8).III (9).III (10).II (11).III

(12).II (13).II (14).II (15).I (16).III (17).I (18).III (19).IV (20).IV

(21).II (22).I (23).II (24).III (25).I (26).III (27).III (28).13 (29).III

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

(01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

1. எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

2. பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்

01. சூரியன் எனும் சொல்லுக்கான இன்னுமொரு சொல்லைத் தருக? ..........................

02. நல்லறிவு என்பதை பிரித்து எழுதுக? ..........................

03. உறுதியான உள்ளம் என்ற கருத்தை தரும் தொடரை எழுதுக? ..........................

04. பாவம் என்பதற்கு உவமானமாகக் கூறப்படும் சொல்லை தெரிவு செய்து எழுதுக? ..........................

05. எமது எண்ணங்கள் எவ்வாறு அமைய வேண்டும்? ..........................

06. நெஞ்சம் என்ற சொல்லில் வந்துள்ள உயிர்க்குறியை குறிப்பிடுக? ..........................

(02) கருத்தினை எழுதுக

01. கண் வளர்தல் .......................... 02. கண் திறத்தல் ..........................

(03) பழமொழிகளின் இடைவெளியை நிரப்புக

01. அளவுக்கு மிஞ்சினால் .......................... நஞ்சு

02. ஏட்டுச் .......................... உதவாது

(04) பின்வரும் தொடர்வாக்கியத்தை தனிவாக்கியமாகவும் தனிவாக்கியத்தை தொடர்வாக்கியமாகவும் மாற்றுக

01. இராமனும், இலக்குமணனும் சீதையை தேடி காட்டுக்குச் சென்றனர்.

1..........................................................

2..........................................................

02. அம்மா நேற்று சந்தைக்கு சென்றார்
அக்கா நேற்று சந்தைக்குச் சென்றார்

1..........................................................

(05) பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக

01. மயில் ஆடியது ..........................

02. தரு காற்றில் அசைந்தது..........................

03 மீன் ஆற்றில் நீந்தியது ..........................

(06) பின்வரும் சொற்களில் இடம்பெற்றிருக்கும் உயிர்குறில்களைக் குறிப்பிடுக

01. கிளிகள் - .......................... 02. கைதி - ..........................

03. தூக்கம் - .......................... 04. நேரம் - ..........................

(07) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

01. நான் வெளியே போகின்றேன் - ..................................

02. சத்தம் போடுவது யார்? ..................................

(08) கருத்தினைத் தருக

01. Twenty - .............................. 02. Goat - ..............................

03. Rainbow - .............................. 04. Lemon - ..............................

(09) கருத்தினை தமிழில் எழுதுக

வேகயன் துவன்ன ..................................

02. ஓயா (ட்) ட (B) பட (G) கினி (Dh) த ..................................

(10) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. உயரத்தில் இருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி
1) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் துணியினால் கட்டுதல்
2) உடலில் விபத்திற்கு உட்பட்ட இடத்தைத் தூய நீரினால் கழுவுதல்
3) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்
4) வெந்நீரைக் குடிக்கக் கொடுத்தல்

02. குழு விளையாட்டுக்களில் இருக்கக்கூடாத இயல்பு பின்வருவனவற்றுள் எது?
1) தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல்
2) தம் பணியைப் பொறுப்புடன் நிறைவேற்றல்
3) தமக்கு விரும்பியவாறு செயற்படுதல்
4) வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்ளல்

03. கொலாஜ் ஆக்கம் என்பது
1) நீர்ச்சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்
2) கோடுகளின் மூலம் வரையப்படும் ஆக்கம்
3) பஸ்ரலைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்
4) கடதாசித்துண்டுகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்

04. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேக வீதி யாது?
1) வடக்கு அதிவேக வீதி 2) தெற்கு அதிவேக வீதி
3) கட்டுநாயக்கா அதிவேக வீதி 4) கொழும்பு, கண்டி, அதிவேக வீதி

05. இலங்கைக்கு உரித்தான தாவரங்களைக் கொண்ட கூட்டம்,
1) ஆம்பல், சடைச்சி, தென்னை, தேயிலை
2) நிலவேம்பு, எண்ணெய், கஸ்தூரி மஞ்சள், சீண்டுக்கொடி
3) காட்டிலுப்பை, மரமஞ்சள், கரும்பு, இறப்பர்
4) ஆமணக்கு, பாக்கிலிப்பால், தொரணை, தேயிலை

06. சைக்கிள் ஒன்றின் பற்சில்லானது எதனுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது
1) முன்பக்கத்தடுப்பு 2) பின்பக்கத்தடுப்பு 3) டைனமோ 4) கால்மிதி

07. சைக்கிள் ஒன்றில் பற்சில்லு நகர்வதற்காக தொடர்புபடுத்தப்பட்டிருப்பது
1) சங்கிலி 2) கைப்பிடி 3) டைனமோ 4) பின்பக்கத்தடுப்பு

08. சாய்தளத்தினூடாக பொருள் ஒன்றை கொண்டு செல்லுவதற்கு இலகுவான முறை எது?




09. பந்தொன்றுக்கு துடுப்பால் அடிக்கின்ற போது நிகழுவது யாது?
1) தள்ளுகை 2) இழுத்தல்
3) தூக்குதல் 4) உருட்டுதல்



10) காமினி வாவி, பசவக்குளம் என்பவற்றை கட்டிய மன்னன் யார்?
1) பண்டுகாபயன் 2) வசபன் 3) தாதுசேனன் 4) மகாசேனன்

11) செதுக்கல் வேலைப்பாடுகளை காணக்கூடிய இடம் யாது?
1) அம்பக்கை - யாப்பகூவை 2) அம்பக்கை - சீகிரியா
3) தலதாமாளிகை - தம்புள்ளை 4) அம்பக்கை - தம்புள்ளை

12) விவசாயம் சார்பாக பொன்மொழிகள் கூறிய மன்னன்
1) வசபன் 2) மகாசேனன் 3) மகாபராக்கிரமபாகு 4) தாதுசேனன்

13) 
இவ்வுருவில் வரலாற்று முக்கியத்துவமுடைய இடம்
1) யாப்பகூவ அரண் 2) கற்பாலம்
3) வட்டதாகே 4) அரசபீடம்

14) பின்வரும் நோய்களில் தொற்றுநோய் அல்லாதது எது?
1) நெருப்புக்காய்ச்சல் 2) மலேரியா 3) கண்நோய் 4) அம்மை

15) 
இக்குறியீடு குறிக்கும் விளக்கமானது
1) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
2) இலங்கை மின்சார சபை
3) எரிபொருள் நிரப்பு நிலையம்
4) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

16) விலங்குகளின் உடலில் கொழுவிக்கொள்ளும் அமைப்பு கொண்ட வித்து
1) முந்திரி 2) புலிநகம் 3) மகோக்கனி 4) காசித்தும்பை

17) காற்று சக்தியின் மூலம் இயக்கப்படுவது
1) புல்லாங்குழல் 2) காந்தப்படகு 3) நீராவிப்படகு 4) சல்லாரி

(11) பின்வரும் பிராணிகளின் பெயர்களை குறிப்பிடுக






(நீலப்புள், முஞ்சூறு, தேவாங்கு, கானாங்கோழி)

(12) கணித வினாக்களுக்கு விடை தருக


01. இலக்கத்தில் எழுதுக. பத்தாயிரத்து ஐந்நூறு ..................................

02. கூட்டுக $\frac{1}{8} + \frac{1}{2} = \square$

03. கழிக்குக. 200200 - 19 =

04. கழிக்குக $\frac{5}{8} - \frac{1}{2} = \square$

05. எண்பெயரை எழுத்தில் எழுதுக 500501 ..................................

06. 
இவ்வுருவை புள்ளிக்கோடு வழியே மடித்து செய்யக்கூடிய திண்மத்தில் காணப்படும் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
..........................

07. ஒரு போத்தலில் நிரப்பத்தக்க இனிப்புப்பானத்தின் கனவளவு 375ml ஆகும். அத்தகைய 7 போத்தல்களில் நிரப்பவதற்கு தேவையான இனிப்புப்பானத்தின் கனவளவை லீற்றர், மில்லிலீற்றரில் தருக?
..................................

# உள்ளூராட்சி அலுவலர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சேவையில் 20 வருடங்கள் பணியாற்றிய உள்ளூராட்சி அலுவலர்களுக்கு நினைவுப் பரிசில், பொன்னாடை மற்றும் சிறந்த சேவைக்கான மெய்ச்சுரை வழங்கி கௌரவிக்கும் பண்பை உள்ளூராட்சி மன்றங்கள் முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவரும் வலிகாமம் ஈ.பி.டி.பி இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) கேட்டுள்ளார்.

வடமாகாணத்தின் உள்ளூராட்சி சேவையும், மெய்ச்சுரையும்' எனும் தலைப்பில் சிவகுரு பாலகிருஸ்ணன் மேலும் கூறுகையில்,

அண்மையில் வடக்கில் உள்ளூராட்சி சபை தலைவர், செயலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் இலங்கை உள்ளூராட்சி சம்மேளங்களின் பொறியியல் ஆலோசகர் பெர்னாண்டோபிள்ளையால் உள்ளூராட்சி சேவை தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டது.

இதில் வினைத்திறன், பயன் வாய்ந்த சேவைகளை மேற்கொள்ளும் உள்ளூராட்சி அலுவலர்கள் (கீழ்மட்ட அலுவலா முதல் மேல்மட்ட அலுவலர் வரை) படிவம் 230 அமைய மெய்ச்சுரை வழங்கி பாராட்டவேண்டும்.

அலுவலர் மேற்கொள்ளும் பயன்மிக்க ஒவ்வொரு சேவைக்கும் வினைத்திறன் வாய்ந்த விருது வழங்கப்படவேண்டும்.

வடமாகாணத்தில் சில உள்ளூராட்சி சபைகள், 10 வருடம், 15 வருடம், 20 வருடம், 25 வருடம் சேவை செய்த உள்ளூராட்சி சேவையாளர்களுக்கு சிறந்த உள்ளூராட்சி சேவையாளன் விருதுகளை வழங்கி கௌரவிக்கின்றனர்.

இது பாராட்டப்படவேண்டிய, மெய்சசப்படவேண்டிய விடயம் ஆகும்.

இதேபோன்று வடக்கில் உள்ள 34 சபைகளும் 2015 இல் இருந்து இவ்வாறான மெய்ச்சுரைகளை, பாராட்டுக்களை, விருதுகளை வழங்கி உள்ளூராட்சி மறுசீரமைப்பினை ஏற்படுத்த வேண்டும்.

தென்பகுதி உள்ளூராட்சி சபைகள் இதனை பயனுள்ள வகையில் முன்னெடுக்கின்றன. வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபையும் பயனுள்ள வகையில் முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் கேட்டுள்ளார். (92)

## மகரஜோதி மண்டலப் பூஜை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆனந்த ஐயப்ப சபரிமலை யாத்திரை குழுவினரால் நடாத்தப்படும் மகரஜோதி மண்டல பூஜை இன்று நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு கணபதி பூஜையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு பஜனை, மங்களதீப ஆராதனையைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறவுள்ளது.

## சிறப்புற நடைபெற்ற ஒளிவிழா



அல்லைப்பிட்டி மெதடிஸ்த திருச்சபையின் ஒளிவிழா நிகழ்வும், பாலர் பாடசாலை ஒளிவிழா நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக யாழ் சேகர முகாமைக் குரு. அருட்திருரவிசங்கர் மற்றும் வண்ணார்பண்ணை மெதடிஸ்த திருச்சபை குருவானவர் அருட்திரு. தேவசேனன் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மார்கழித் திருவெம்பாவை

## இன்று 9 ஆம் நாள்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானைப் புகழ்ந்தும், அவருடைய அருட்பெருங்கருணையை வியந்தும் மணிவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்து அருளிச செய்யப்பெற்ற தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவல் திருவாசகம். அந்த திருவாசகத்தில் வரும் ஓர் இனிய பகுதி தான் திருவெம்பாவை. அந்த விசேட பதிகமான திருவெம்பாவை பத்து நாட்களுக்கு எல்லா ஆல யங்களிலும் ஓதப்படுகின்றது.

அந்தத் திருவாசகத்தேனின் துளிகளான "திருவெம்பாவை இருபது" பாடல் களையும் அதற்கான பொருள் விளக்கத்துடன் தினம் இரண்டு பாடல்கள் வீதம் "தினமுரசு" வாசகர்களுக்குத் தருகின்றோம். படித்துப் பயன்பெறுக.

**திருவெம்பாவை**



செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

**பொருள்விளக்கம்.**

நல்ல வாசனையுடைய கரிய கூந்தலை உடையவனே திருமால், பிரமன், தேவர்கள் முதலானவர்களிடத்தும் வேறு எங்கும் இல்லாத இன்பம் நம்மிடத்ததாக அவன் நம்மைக் குற்றங்கள் நீங்கிக்குணம் கொண்டு கோதாட்டுவான். மேலும் இந்த உலகத்திலே நம் வீடுகள் தோறும் எழுந்தருளி வந்து, தன்னுடைய செந்தாமரை போன்ற பொன்மயமான திருப்பாதங்களை வழங்கியருளினான். அந்தச் சேவகனை, அருள் கனிந்த ஞானக் கண்களை உடைய அரசனை, அடிமைகளாகிய எமக்குத் தெவிட்டாத தெளிந்த அமுதமான சிவனை நாங்கள் பாடிப்பாடி மகிழ்கின்றோம். அவ்வாறு சிவபெருமானைப் பாடிக்கொண்டே மங்களம் பெருகி விளங்கிட தாமரை மலர்கள் நிறைந்த தண்ணீரிலே பாய்ந்து நீராடி மகிழ்வோமாக.

அதாவது எமது இல்லங்களில் மங்கலம் பெருகி சுபீட்சம் வர சிவபெருமானைத் துதிக்க வேண்டும் என்பதாம்.



அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

**பொருள் விளக்கம்.**

அழகிய தோழிப்பெண்ணே! திருவண்ணாமலையில் சிவபெருமான் ஒளிப்பிழம்பாகக் காட்சி தருகின்றான். அவனுடைய திருவடித் தாமரைகளில் தேவர்கள் விழுந்து வணங்குகின்றபொழுது அவர்களுடைய முடிகளில் பதிக்கப் பெற்றுள்ள பலவகையான இரத்தின மணிகளின் தொகை சிவனுடைய திருப்பாதப் பேரொளியின் முன் ஒளியிழந்து வீறு அற்றுப்போய் விடுகின்றன. அவை போல இருள் நீங்கும்படி சூரியன் உதயமானதும், விண்மீன்கள் ஒளியிழந்து மறைந்து போய்விட்டன. இப்பொழுது காலைப்பொழுது விடிந்து விட்டது. இறைவனானவன் பெண், ஆண் அலி என்று மூன்றுமாயிருக்கின்றான். ஒளிவீசுகின்ற சூரியனும், மதியும் சுடர்களும் பொருந்திய வானமானவன். மண்ணும் ஆனவன், இவற்றுக்கு வேறாகவுள்ள அனைத்துமானவன். அவன் நம் கண்முன்னே காட்சி தரும் நிறைந்த அமுதமாகி நின்றான். அவனுடைய திருப்பாதங்களைப் பாடி 'மலர் நிறைந்து விளங்கும் இந்த நீரிலே பாய்ந்து பாய்ந்து ஆடி மகிழ்வோமாக என்பதாம்.

*சிவநெறிக் கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்*

# கிழக்கு பல்கலைக்கழகம் 12 இல் மீள ஆரம்பம்

மட்டக்களப்பில் நிலவிய சீரற்ற காலநிலையால் மூட்டப்பட்டிருந்த கிழக்குப் பல்கலைக்கழகம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அனைத்து பீட மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகளும் மீள ஆரம்பமாகவுள்ளதாகவும் சகல மாணவர்களும் 12 ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் பல்கலைக்கழக பதிவாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்துப் பீடங்களையும் சார்ந்த சகல மாணவர்களுக்குமான தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி (திங்கட்கிழமை) முதல் மீள் ஆரம்பமாகும்.

விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள அனைத்து மாணவர்களும் தத்தமது விடுதிகளுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி முதல் வருகை தரமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளர் (மாணவர் நலன்புரி) தொலைபேசி இலக்கம்: 065-2240731 மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பன்முகசேவைக்கான கௌரவிப்பு நிகழ்வு

நவாலி ஸ்ரீகதிர்காம கந்தன் ஆலயத்தில் பல்கலை வேந்தர் கலாபூஷணம் வை.கமலநாதனுக்கு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் பன்முக சேவையைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

கதிர்காமக்கந்தன் ஆலய பிரதம குரு சிவத்திரு மாரிமுத்து பத்மநாதன் தலைமையில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

வலி.தென்மேற்கு மட்டுமன்றி வடக்கில் மேடைநாடகம், வாத்திய கலை, தனிநடிப்பு, நகைச்சுவை நடிப்பு எனப் பலகலைகளில் தேர்ச்சி பெற்று பல்கலை வேந்தன் பட்டம் பெற்று இறுதியாக இந்து கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது பெற்றவருக்கே நவாலி மானிப்பாய் மக்கள் ஒன்றுகூடி வாழ்த்தவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய பிரதமகுரு மேற்கொண்டுள்ளார். அன்றைய தினம் காலை திருவாசக முற்றோதல், விசேட பூசை வழியாடு பஜனை வழிபாடு, மற்றும் வீதி உலாவரும் நிகழ்வும் அன்னதானமும் இடம்பெறும். அன்றையதினம் இடம்பெறும் லயன். வை.கமலநாதனின் கௌரவிப்பு விழாவில் வாழ்த்துவோர் பரிசில் வழங்குவோர் கலந்து சிறப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (92)

## ஈராக்கில் கடந்த ஆண்டில் யுத்தத்தால் 12,282 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்



(பாக்தாத்)

ஈராக்கில் 2006 ஆம் ஆண்டு முதலே வன்முறை மற்றும் தவிரவாத சம்பவங்களால் அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர்.

அந்த வகையில் 2014 ஆம் ஆண்டு தொடரும் மரணத்தின் ஆண்டாகவே அமைந்தது. 2006 இற்குப் பிறகு அதிக அளவாக கடந்த ஆண்டில் மட்டும் 12,282 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள தாகவும் 23,126 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஐ.நா.வின் புதிய அறிக்கை தெரிவிக்கிறது. ஈராக்கின் சாதாரணக் குடிமக்களே தீவிர வாதத்தால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், 2014 ஆம் ஆண்டு அதிகம் பேர் கொலை செய்யப்பட்ட ஆண்டாக இருப்பதாகவும் ஈராக்கிற்கான ஐ.நா. உதவிக்குழு தலைவர் நிக்கோலே மிலடனோவ் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் தீவிரவாதம் மற்றும் வன்முறை சம்பவங்களால் 1,101 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 680 பேர் பொதுமக்கள், 421 பேர் பாதுகாப்பு வீரர்கள் ஆவர்.

# உக்ரைன் யுத்த விவகாரம் அமெரிக்கா - ரஷ்யா பேச்சு



(வொஷிங்டன்)

உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் ரஷ்யாவுக்கு பிரச்சினை இருந்து வருகிறது. இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் நேற்றுமுன்தினம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக அமெரிக்க வெளியுறவு துறை அறிவித்துள்ளது.

உக்ரைனின் கிழக்கு பகுதியான கிரைமீயாவை கடந்த ஆண்டு ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் வாக்கெடுப்பு மூலம் ரஷ்யாவுடன் இணைத்து கொண்டனர். அத்துடன் உக்ரைனின் கிழக்கு பிராந்தியத்தில் பல பகுதிகளை தங்கள் கட்டுப் பாட்டில் வைத்துள்ளனர்.


உக்ரைனில் நடைபெற்று வரும் உள்நாட்டு பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன. அத்துடன், கடந்த மாதம் கிரைமீயாவுக்கு செல்லும் அனைத்து போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டன. இந்நிலையில், ரஷ்ய வெளியுறவு துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் நேற்று முன்தினம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அப்போது உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் உள்ள பிரச்சினைகள் குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தத் தகவலை அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் உறுதி செய்துள்ளது. உக்ரைன் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே நீண்ட கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

எனினும், இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் நல்ல நட்பை வைத்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக, கடந்த மாதம் 14 ஆம் திகதி இத்தாலியில் இருவரும் 3 மணி நேரத்துக்கு மேல் உக்ரைன் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# எயார் ஏசியா விமான விபத்து 30 சடலங்கள் கண்டெடுப்பு




எயர் ஏசியா விமான விபத்தில் இறந்த, 30 பேரின் உடல்களை, மீட்புக் குழுவினர் கண்டெடுத்துள்ளனர். இந்தோனேஷியா சுரபயா நகரிலிருந்து சிங்கப்பூருக்கு புறப்பட்ட விமானம், ஜாவா கடற்பகுதியில் எதிர்பாராத விதமாக விழுந்து நொருங்கியது.

பல நாடுகளின் உதவியுடன், இதில், பயணம் செய்த, 162 பேரின் உடல்களை தேடும் பணி த்விரமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், மீட்புக் குழுவினர், 30 பேரின் உடல்களை கைப்பற்றியுள்ளனர்.

இதில், ஐந்து பேரின் உடல்கள் விமான இருக்கையில், "சீட் பெல்ட்" அணிந்த நிலையிலிருந்து மீட்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிநவீன உபகரணங்கள் மூலம், 5 சதுர கிலோமீற்றர் சுற்றளவில், கடற் பகுதியில் விழுந்து நொருங்கிய விமான பாகங்களை தேடும் பணி, மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதுகுறித்து, இந்தோனேஷியாவின் மீட்புக்குழு தலைவர் ஹென்றி பாம்பங் சொலிஸ்டியோ கூறுகையில், "நொருங்கி விழுந்த விமானத்தின் பெரிய பாகத்தை கண்டறிவது, கறுப்பு பெட்டியை மீட்பது ஆகிய இரண்டு பணிகளை முதன்மையாகக் கொண்டு தீவிர தேடுதல் வேட்டை முடுக்கி விடப் பட்டுள்ளது என்றார்.

## இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அறிவியலே மூலதனமாகும்



இந்தியாவை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்று நவீன இந்தியாவை உருவாக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தான் பெரிதும் உதவின என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

மும்பையில் உள்ள மும்பை பல்கலைக் கழகத்தின் 102 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை தொடக்கி வைத்தார் பிரதமர் மோடி.

அப்போது பேசிய அவர், நாட்டின் வறுமையை ஒழிக்க அறிவியலும், தொழில்நுட்பமும் பெரிதும் உதவுகின்றன.

பல்வேறு சூழ்நிலைகளில் உலக நாடுகள் இந்தியாவுக்கான கதவுகளை அடைக்கும் போதெல்லாம், நமது அறிவியல் விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும்தான் நமது முன்னேற்றத்துக்கா[illegible] ஊக்கத்தையும், பாதையையும் வகுத்துள்ளனர் என்றும் கூறினார்.

# மகளிர் அணியில் கனிமொழி கருணாநிதி தீவிர ஆலோசனை

அ.தி.மு.க.,வுக்கு ஜெயலலிதா, தே.மு.தி.க.,வுக்கு பிரேமலதா, பா.ஜ.,வுக்கு தமிழிசை சவுந்தரராஜன், வானதி சீனிவாசன் போன்ற பெண்கள் இருந்து, கட்சியை மகளிர் மத்தியில் கொண்டு போவது போல, தி.மு.க.வில் கனிமொழியை பிரதானப்படுத்தி, கட்சியை மகளிர் மத்தியில் வேகமாக எடுத்துச்செல்ல வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.

தி.மு.க.விலும் மகளிர் அணி இருக்கிறது. ஆனால், அந்த அணி மற்ற கட்சிகளில் செயற்படுவதுபோல வேகமாக செயற்படாமல் இருக்கிறது. இதுதொடர்பில் கட்சி மறுசீரமைப்பு குழுவினர் உட்பட கட்சியின் மேல் மட்டத் தலைவர்கள் பலரும், இதை கட்சியின் தலைவர் கருணாநிதியிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இதுகுறித்து, அக்கட்சி வட்டாரங்களில் கூறியதாவது, ஏனைய கட்சிகளை போன்று தி.மு.க. விலும் கனிமொழியை பயன் படுத்தவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இந்த வலியுறுத்தலல், சாரம் இருப்பதாக நினைக்கும் கருணாநிதி, இதுகுறித்து, கட்சியின் முன்னணியினருடன் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார்.

# கையில் நுழைந்த கம்பி 51 வருடங்களின் பின் அகற்றல்



அமெரிக்காவில் இல்லினோயிஸ் மாகாணத்தின் உள்ள கிரனைட் நகரத்தை சேர்ந்த அர்துர் லம்பித்ட் என்பவருக்கு 1963 ஆம் ஆண்டு தனது தண்டர பேர்டு வண்டியில் செல்லும் போது சிக்னலில் ஒரு டிரக் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது அவருடைய இடது கையில் ஒரு இரும்புக்கம்பி நுழைந்தது.

51 ஆண்டுகளுக்கு பின்னர் அந்தக் கம்பி தற்போது அகற்றப பட்டுள்ளது. அர்துர் லம்பித்டுக்கு தற்போது 75 வயது ஆகிறது. இது குறித்து அவருக்கு சிகிச்சை அளித்த செயின்ட் லூயிஸ் மருத்துவர் கூறுகையில் அர்துர் லம்பித்டின் இடுப்பு விபத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

அவரது இடது கையில் ஒரு லீவர் கம்பி உள்ளே நுழைந்துள்ளது. இது அவருக்கு தெரியவில்லை. ஏன் என்றால் அது அவருக்கு வலியையோ, வேதனையையோ தரவில்லை. இந்நிலையில் அவருக்கு முதல் முறையாக வலி ஏற்பட்டபோது அவரின் இடது கையை எக்ஸ்-ரே எடுக்கையில் ஒரு பென்சில் அளவிலான கம்பி உள்ளே இருப்பதை காட்டியது. இதனையடுத்து அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்து கம்பி வெளியே எடுக்கப பட்டதாக தெரிவித்தார். தற்போது அவர் வீட்டில் நலமுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## புற்றுநோய் அணுக்களை அழிக்கும் புதிய மூலக்கூறு கண்டுபிடிப்பு

புற்றுநோய் செல்களின் உயிரியல் கடிகாரத்தை மறு அமைப் பாக்கம் செய்து புற்றுநோய் கட்டியின் வளர்ச்சியைத் தடுக்கும் புதிய மூலக்கூறு ஒன்றை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்த மூலக்கூறு "6-தியோ-2 (6-வாழை-2)- டீஆக்சிகுனோசைன் (6-thiodG) என்று அழைக்கப்படுகிறது.

இது புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுப்பதாக தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டீஆக்சொகுனோசைன் குறைந்த அளவில் கொடுத்த போதும் பலதரப்பட்ட புற்றுநோய் செல்களுக்கு எதிராகவும் பரவலான முறையில் இந்த மூலக்கூறு செயற்படுகிறது என்று டெக்ஸாஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ஜெரி ஷேய் என்பவர் தெரிவித்தூர். இந்த மருந்தை எலிகளில் பரிசோதனை செய்து பார்த்தபோது, ஈரல், சிறுநீரகம், ரத்தம் என்று எதிலும் பக்கவிளைவுகள் ஏற்படவில்லை என்றும் இந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள் ளார்கள்.

# மைத்திரி ஆட்சிக்கு வந்தால்

## வாழ்வாதார உதவித்திட்டத்துக்கு ஆப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக் வந்தால் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவித்திட்டங்கள் உடன் நிறுத்தப்படும். ஏனெனில் அவர்களிடம் தூரநோக்கு சிந்தனைகள் எதுவும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்று கிளிநொச்சி திருவையாறு பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரித்து நடாத்தப்பட்ட பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

இலங்கை சுதந்திரமடைந்ததற்குப்பினால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரச சியல் கட்சி [illegible]நும் எந்த தலைவர்களும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களின் மேம்பாடு தொடர்பில் சிந்திக்கவில்லை அவர்களின் அன்றாட வாழ்வாதாரம் பற்றிக்கூட எவரும் கவனத்தில் கொள்ளவில்லை 17 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சியினர் திறந்த பொருளாதாரக் கொள்கையை கையாண்டு சாதாரண மக்களின் வாழ்விற்கு சாவு மணி அடித்தனரே தவிர அவர்க[illegible]ின் மேம்பாடுதொடர்பில் எவ்வித ஆக்கபூர்வமான சிந்தனையும் கொண்டிருக்கவில்லை இதானல் நாட்டில் இன மத சமய மொழி வேறுபாடுகளுக்கப்பால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பொருளாதாரத்தால் நலிவுற்ற சமூகமும் மற்றும் பொருளாதார மேம்பாட்டை எட்டிய ஒரு வர்க்கமும் உருவாகியது அந்த அரசாங்கத்தின் செய்பாடுகள் அனைத்தும் பொருளாதாரத்தால் மேம்பட்ட மக்களின் நன்மைகளை இலக்காகக் கொண்டவையாகவே அமைந்திருந்தன இந்நிலையில்தான் பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச சமுர்த்தி திட்டம் எனும் வறுமை ஒழிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தினார் இத்திட்டம் பின்னர் வாழ்வின் எழுச்சித்திட்டமாக விஸ்தரிக்கப்பட்டு மக்களுக்கு பல நன்மைகளை வழங்கும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனூடாக வறுமைக்கோட்டின் கீழ்வாழ்கின்ற ஒரு மனிதன் பிறப்பு தொடக்கம் அவனது இறுதிக்காகலம் வரை கொடுப்பனவுகளைப் பெறக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 61 வீத மானவர்கள் இவ் வாழ்வெழுச்சித் திட்டத்திற்கூடாக நன்மைகளை பெற்று வருகின்றனர் அவர்களின் வாழ்வில் ஒளியேற்றப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, அரசாங்கத்தின் வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக இரட்டிப்பான கொடுப்பனவுகள் அவர்களுக்கு கிடைக்கின்றது. யுத்தத்தால் உழைப்பாளர்களை இழந்த பல குடும்பங்கள் இன்று வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் உதவிகளை மட்டுமே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் இந்நலையில் நடைபெறப்போகும் ஜனாதிப்பதித் தேர்தலில் மைத்திர்பால சிறிசேன ஆட்சிக்கு வந்தால் முதன் முதலாக இத்திட்டங்கள் நிறுத்தப்படும் மீளவும் ஏற்றத்தாழ்வுடைய சமூகம் உருவாக்கம்பெறும் வறுமைக்கோட்டுக்கு கீழ்வாழும் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். எனவும் அவர் குறிப்பிட்டார்.

### தெற்காசிய...

சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். தேர்தல் சட்டதிட்டங்களை மீறிய மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 245 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை தொடர்பில் 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

### சமுர்த்தி...

உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. வறிய மக்களின் வாழ்வாதார மேம்பாடு கருதி நடைமுறைப்படுத்தபட்டுவரும் சமுர்த்தி திட்டத்தின் கீழ் அக்கராயன் பிரதேச சமுர்த்தி வங்கிச் செயலகத்தில் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், ஸ்கந்தபுரம், மணியம்குளம், கண்ணகிபுரம், அக்கராயன், கோணாவில் ஊற்றுப்புலம் பல கிராம மக்களில் உள்ள சமுர்த்தி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட வறிய மக்கள் இந்த வங்கிச் செயலகம் மூலமே பயன்பெற்று வந்தனர். இந்த நிலையில் வறிய மக்களின் மேம்பாட்டை பொறுத்துக்கொள்ள முடியாத குறித்த பிர தேசத்தை சேர்ந்த காடையர் கும்பல் ஒன்று நேற்று முன்தினம் இரவு வங்கியின் பெயர் பலகையினை உடைத்து அழித்துள்ளனர். இந்த செயற்பாடு இந்த பிரதேச மக்கள் மத்தியில் கடும் எதிர்பு உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

### கூட்டமைப்பின் முடிவை..

இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை பகிரங்கமாக விமர்சிக்கும் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு, தாம் மாவை சேனாதிராசாவுக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து உரிய முறையில் நடவடிக்கை எடுக்குமாறு மாவை சேனாதிராசாவை கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். இந்த விவகாரம் குறித்து அவர் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடன் பேசியிருப்பார் என்று நம்புகிறேன். என்றும் நாம் வடக்கு மாகாணசபையில் 30 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறோம். அவர்களில் இரண்டு மூன்று பேர் தான் இத்தகைய நிலைப்பாட்டில் இருக்கின்றனர். என்றும் இதனை அனுமதிக்க முடியாது என்றும் சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

### அமைச்சுப்....

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கக் கூடியவர்கள் தற்போது இல்லை என்பதால் அவர்கள் மீது பல தரப்பினரும் வீணான பழிகளை சுமத்தி வருகின்றனர். 2005 ஆம் ஆண்டு தேர்தலின் போது புலிகள் பணத்தைப் பெற்றுக் கொண்டுதான் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் செய்தனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதுவும் வெறும் 20 கோடி ரூபாவுக்காகவே அவர்கள் தமிழ் மக்களை வாக்களிக்காது தடுத்தனர் எனக் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துக்கு சமாந்தரமான அரசாங்கத்தை நடத்தியவர்கள். அவர்களுக்கு வரி மூலம் கிடைத்த பணத்தை எண்ணுவதற்காகவே பல இயந்திரங்களைப் பயன்படுத்தினர். அப்படிப்பட்டவர்கள் 20 கோடி ரூபாவுக்காக வாக்களிப்பை தடுத்தனர் என்பது தவறானது. குறைந்த பட்சம் இடைக்கால நிர்வாக அலகு குறித்தாவது எழுத்து மூல உறுதிப்பாடொன்றை உருவாக்க என் மூலமாக அனுப்பிய செய்தியை ரணில் விக்கிரமசிங்க அன்று கேட்கக்கூடவில்லை. இடைக்கால நிர்வாகம் குறித்து பேசாததாலேயே அன்று வாக்களிக்காது தடுத்தனர். பின்னர் என்னிடம் இது குறித்து அவரே கவலையுடன் மனம் வருந்திக் கூறினார். புலிகள் பணம் பெற்றுக் கொண்டு தடுத்தனர் என்பது பிழையானது என்றார்.

மேலும் மைத்திரிக்கான தேர்தல்கால அதரவை கூட்டமைப்பு வழங்குவது என்ற முடிவு தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று அமைச்சுப்பதவிகளுக்கு ஆசைப்பட்டு இந்த தீர்மானத்துக்கு வந்தது மிகவும் வேதனைக்குரியது என்றும் அவர் தெரிவித்தார். (25)

### கூட்டமைப்பின்...

லும் போது எந்த கருத்துக்களையும் கூறவில்லை.

அந்த அடிப்படையில், மக்களிடம் சென்று இவருக்கு வாக்களிக்குமாறு கேட்க முடியாது. அத்துடன், யுத்தம் நிறைவடைந்த பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போட்டியிடுவதற்கு ஆதரவு தெரிவித்தனர். ஆனால், சரத் பொன்சேகா தோல்வியடைந்தார்.

ஆந்த வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்த செயற்பாட்டினை தாம் முற்றாக நிராகரிப்பதுடன், இந்த தேர்தலிற்கு மக்களை வாக்களிக்குமாறு கேட்க முடியாதென்றும் அவர் மேலும் கூறினார். (25)

### யதார்த்தமான...

தெளிகருவி, மின்சார நீர்ப்பம்பி, முட்கம்பி உள்ளிட்ட விவசாய உபகரணங்கள் 25 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு விவசாயிகளுக்கு நாம் பெற்றுக் கொடுப்பதன் நோக்கம் யுத்த பின்னடைவுகளிலிருந்து விவசாயத்தை மேம்படுத்தி அதனூடாக அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாத்து பலப்படுத்துவதே நோக்கமாகும்.

அதுமட்டுமன்றி விவசாயிகளும் நெற்செய்கையாளர்களும் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் குறிப்பாக கால்நடைகளால் எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பிரதேச சபைச் செயலாளர்கள் ஊடாக கலந்துரையாடி உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இதேபோன்று சில பகுதிகளில் குரங்குகளின் தொல்லைகளால் பாதிக்கப்படும் விவசாயிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதற்கேற்ற வகையிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வெங்காயத்தை எமது பகுதிக்கு இறக்குமதி செய்வதை தடுக்கும் வகையில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி அதற்கான தீர்வினை பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் வெங்கா்ய சங்கமொன்றை இம்மாத இறுதிக்குள் உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோன்று சிறுகுளங்கள் வாய்க்கால்கள் திருத்தம், மழைநீர் சேகரிப்பு திட்டம், விவசாயிகளுக்கான வங்கிக்கடன்களை இலகுபடுத்துவது அல்லது இரத்துச் செய்வது, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை உருவாக்குவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டு அதற்கான தீர்வுகளும் பெற்றுத்தரப்படும்.

அந்தவகையில் மத்திய அரசுடன் நல்லுறவை வைத்துக் கொண்டு அதனூடாக விவசாயிகள் மட்டுமன்றி எமது மக்கள் எதிர்நோக்கும் நாளாந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எனவே, மக்கள் சரியானதொரு நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு அதன்வழி நான் காட்டும் பாதையில் பயணிக்கும் பட்சத்தில் அவர்களது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடியுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே விவசாயிகளினது தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் விரிவாகக் கேட்டறிந்து கொண்டார். வல்லிபுரம் விவசாய சம்மேளனத் தலைவர் பராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் கைலாஜினி, ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன், ஈ.பி.டி.பியின் கரையோர இணைப்பாளர் இரட்ணகுமார், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினர் மணிதரன், உள்ளிட்டோர் உட்னிருந்தனர்.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 322
திகதி - 2015.01.02
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

03 13 21 35 S

பரிசுத் தொகை ரூபா. 20,532,400/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 06 | 300,000/- |
| [illegible] | 1,000/- | 202 | 202,000/- |
| [illegible] | 1,000/- | 389 | 389,000/- |
| [illegible] | 60/- | 9080 | 544,800/- |
| [illegible] | 40/- | 4823 | 192,920/- |
| [illegible] | 20/- | 119866 | 2,397,320/- |
| [illegible] | 20/- | 17340 | 346,800/- |
| [illegible] | 20,532,400/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,372,840/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 20,767,000/-

2015.01.06ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே: 011 2333546/47

(C/3979)

# அரசியல் உரிமை பிரச்சினைக்கு நிலைத்திருக்கக்கூடிய தீர்வு

## இதுவே எமது அரசியல் இலக்கு



எமது மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மட்டுமன்றி அரசியல் உரிமை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதே எமது அரசியல் நிலைப்பாடாகும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எனது கோரிக்கையின் பிரகாரம் வடமாகாண ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபாய் வீதம் ஆளுநர் ஊடாக வழங்கப்பட்டு வந்த நிலையில் இன்றும் அது தொடர்கின்றது.

அந்தவகையில், தற்போதைய வடமாகாண சபையூடாக முன்பள்ளி ஆசிரியர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும. ஆனாலும், அவர்கள் குறித்த விடயத்தில் அக்கறையற்று இருக்கின்றார்கள்.

வட மாகாண சபைக்கென மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை கொண்டு மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியாதவர்களாக செயற்பட்டு வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி சி. ஹேமா, முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட பலர கலந்துகொண்டனர்.

# வரலாற்றில் மிகப் பெரிய சதி மைத்திரியை கண்டிக்கிறார் பீரிஸ்



இலங்கை வரலாற்றில் 200 வருடங்களின் பின்னர் மைத்திரியால் மிகப்பெரிய சதி இலங்கையில் 1815 ஆம் ஆண்டு மலையக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டபோது உருவான பெரும் சதியைப் போல எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவால் 200 வருடங்களுக்குப் பின்னர் நாட்டில் மிகப் பெரும் சதித் திட்டம் ஒன்று உருவாகியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் இந்தச் சதி நாட்டுக்குப் பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இதன்போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு

"1815 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆளுநர் றொபேட் பிரவுன்றிக்கினால் மலையக ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் அப்போதைய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கு எதிராக மலையக மக்களை அணி திரட்டுவதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். மலையக மக்களைக் காப்பாற்றுவதாகக் கூறி தமது இராணுவத்தை அனுப்பி மலையகத்தைக் கைப்பற்றுவதற்காக பிரித்தானியர்கள் மேற்கொண்ட நடவடிக்கையாகும். ஆனால், தற்போது அதைவிட பெரும் சவால் உருவாகியுள்ளது" - என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, "200 வருடங்களின் பின்னர் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவால் நாட்டில் பாரிய தொரு சதி உருவாக்கப்பட்டுள்ளது. 1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி மலையக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன்போது எமது மன்னனுக்கு எதிராக எமது மக்களையே அணிதிரட்ட பிரிதானியர்கள் முயற்சித்தனர். எமது மக்களே எமக்கு எதிராக செயற்படும் நிலை உருவானது. அதன் பிரதிபலனை அவர்கள் அனுபவிக்கவும் நேர்ந்தது" - என்றார்.

# முல்லை அமைப்பாளராக தொடர்ந்தும் கனகரட்ணம்

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் தொடர்ந்தும் கடமையாற்றிவருகிறார்.

இவர் மேற்படி பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதாக ஏற்கனவே வெளியாகிய தகவல் தவறானது என்றும் இவருக்கு பதிலாக வேறு எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்டணமும் நேற்று உறுதிப்படுத்தினார்.

# நாவாந்துறை பகுதி வன்முறைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்



நாவாந்துறை பரலோகமாதா கோவில் முன்றலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி மக்களை நேற்றைய தினம் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட போதே மக்கள் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளனர்.

தமது பகுதிக்கு வந்த குறிப்பிட்ட சில நபர்கள் தங்களுடைய வீடுகளுக்கு முன்பாக வந்து நின்று பெயர் சொல்லி அழைத்து தம்மை தாக்கியதாகத் தெரிவித்தனர்.

அவ்வாறு தாக்கியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் என்றும் அவர்களை தம்மால் அடையாளம் காண முடிந்ததாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள் சென்.மேரீஸ் மற்றும் சென்.நீக்கிலஸ் மக்களிடையே நிலவிவரும் முரண்பாடுகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு காணப்பட வேண்டும்.

எமது சமூகமென்ற வகையில் சமூகத்திற்கிடையேயுள்ள முரண்பாடுகளைத் சுமூகமாக தீர்த்து வைக்கும் அதேவேளை, துஸ்பிரயோகங்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட வேண்டாமெனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே பங்குந்தந்தை வண.பிதா ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் இரு பகுதிகளைச் சேர்ந்த தலா ஒன்பது அங்கத்தவர்களையும், சமூகநலன் விரும்பிகள் சிலரை உள்ளடக்கியதாக இரு குழுக்களை அமைத்து முரண்பாடுகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார்.

இதனிடையே இவ்வாறான முரண்பாடுகளை மக்கள் மத்தியில் தோற்றுவிப்பவர்கள் குறித்து மக்கள் தெளிவுடன் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக அமைசசர் டக்ளஸ் தேவானந்தா மக்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் யாழ்.நகர இணைப்பாளர் துரைராசா இளங்கோ (றீகன்), அகஸ்ரின் மாஸ்டர், சட்டத்தரணி றெமீடியஸ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பிரசார கூட்டத்தை குழப்பமுயற்சி கூட்டமைப்பு உறுப்பினர்கள் அடாவடி

ஸ்கந்தபுரத்தில் கலகம் அடக்கும் பொலிஸார்



நேற்றுக் காலை பத்து மணிக்கு கிளிநொச்சி கந்தபுரத்தில் இடம்பெற்ற சட்டரீதியாக பொலிஸ் அனுமதி பெறப்பட்டு தேர்தல் விதி முறைகளுக்கு அமைவாக நடத்தப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கும்பல் ஒன்று அத்துமீறி ரவுடித்தனத்தில் ஈடுபட்டு குழப்பம் விளைவித்தமையினை தொடர்ந்து கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு கூட்டம் சுமூகமாக நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேசங்கள் தோறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவை ஆதரித்து ஐக்கிய மககள் சுதந்திர முன்னணியின் தேர்தல பிரசார கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. உரிய முறைப்படி கூட்டம் நடத்தப்படுகின்ற இடத்திற்கான அனுமதி,ஒலி பெருக்கி பயன்படுத்துவதற்கான அனுமதி உள்ளிட்ட தேர்தல் விதி முறைகளுக்கு அமைவாக கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு கூட்டம் ஆரம்பமாகிய நிலையில் கூட்டத்தை குழப்பும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் தயாபரன் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணி செயலாளர் சர்வாணந்தா, கட்சி உறுப்பினரும் அக்கராயன் மகா வித்தியாலய ஆசிரியருமான கதிர்மகன், அதே பாடசாலை ஆசிரியர் தவசீலன், மற்றும் கட்சியின் கந்தபுரம் அமைப்பாளர் கரன் ஆகியோர் அடங்கிய கும்பல் ஒன்று கூட்டம் இடம பெற்ற இடத்தில் ஆரம்பம் முதல் குழப்பத்தை ஏற்படுத்தி இடையூறு விளைவித்ததோடு பெருமளவு மக்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் மக்கள் முகம் சுழிக்கும் வகையில் நாகரிகமற்ற சொற்பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.

இந்த நிலையில் மேற்படி கும்பலின் ரவுடித்தனம் தொடர்பில் பொலிஸாருக்கும், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சி அமல்ராஜ் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்தமையினை அடுத்து கலகம் அடக்கும் பொலிஸார் உள்ளிட்ட மேலதிக பொலிஸார் கந்தபுரத்த்திற்கு வரவழைக்கப்பட்டு கூட்டம் சுமுகமாக நடத்தி முடிக்கப்பட்டது.அத்தோடு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் உரிய இடத்திற்கு விரைந்திருந்தார்.

ஆசிரியர்களாக, பிரதேச சபை உறுப்பினர்களாக இருக்கின்ற இவர்களின் அநாகரீகமான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியதனையும் அவதானிக்க முடிந்தது.

(௨௭)

# மீலாதுன் நபி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முஹம்மது நபியின் நினைவு தினத்தை முன்னிட்டு மீலாதுன் நபி நிகழ்வு இன்று காலை 7 மணியளவில் பல நிகழ்வுகள் நடைபெறவுள் ளது.

நாட்டிற்கும் நாட்டு மக்களிற்கும் சாந்தியும் சமாதானமும் வேண்டி விசேட துஆப்பிராத்தனை இடம் பெறவுள்ளது. தொடர்ந்து வீடுகளிற்கு நாரிசாக்களும் வழங்கப்படவுள்ளது.

வரும் செவ்வாய்க்கிழமை அஸர் தொழுகையின் பின் 4 மணியளவில் யாழ்ப்பாணம் முஹியித்தின் தக்கியா (செவலப் பள்ளி) முன் சந்தியில் தலை சிறந்த தென்னிந்திய மற்றும் இலங்கை உலமாக்களால் உபண்ணியாசமும் (பயான்) நிகழ்த்தப்படவுள்ளது.

தினமும் செவலப் பள்ளி வாசலில் தினமும் மௌ லூத் மற்றும் பயான் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேற்படி நிகழ்வுகளுக்கு யாழ். கிளிநொச்சி ஜம்மியதுல் உலமா சபை தலைவர் மௌலவி ஏ.எம் அப்துல் அஸீஸ் (காஸிமி) தலைமை தாங்கவுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அப்பகன் அச்சகத்தில் 2015 ஜனவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.